ஜனவிநோதினி.

இல. 4.] ஏப்பிரல்மீ 1875. [புஸ்த. VI.

பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம்.

இப்போது (Italy) இடலி தேசத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிற பைசா என்னும் நகரத்தில் மிகவும் ஆச்சரியகரமான ஒரு சாய்ந்த கோபுரம் இருக்கிறது. அது ஒரு ஜர்மனி சிற்பசாஸ்திரவித்வானால் ஏறக்குறைய 1150-ம் வருஷத்தில் கட்டப்பட்டது. அதன் பக்கத்தில் மகா பிரசித்திபெற்ற ஒரு தேவாலயம் உண்டு; அந்த ஆலயத்து மணிகட்டுவதற்காகவே அந்தக் கோபுரம் கட்டப்பட்டதாம். அது முழுதும் வெண்கல்லினால் செய்யப்பட்டு அடியில் பருத்து நுனியில் சிறுத்திருக்கிறது; திவ்வியமாய் அலங்கரிக்கப்பட்ட கம்பங்கள் அமைந்து சக்கரவடிவான எட்டு நிலைகள் உள்ளதாயிருக்கின்றது. உச்சியில் சமமாகத் தளம்போட்டிருக்கிறது; அங்கிருந்து பார்த்தால் சுற்றுப்பக்கத்தில் வெகுதூரத்துக்கு வெகுதூரம் தெரியும். அடியிலிருந்து உச்சிவரையில் கோபுரம் 188-அடி உயரம்.

கோபுரம் நேராயிராமல் சாய்ந்துநிற்கிறபடியால் அது எந்த விதமாய் அப்படி நிற்கிறதென்று சிலர் சந்தேகிக்கிறார்கள். உச்சியிலிருந்து ஏதாவது ஒரு பொருளை நேராகக் கீழேவிட்டால் அது அடிவாரத்துக்குப் பதினைந்து அடிதூரத்தில் விழுகிறது. எந்த வஸ்துவாகட்டும் அதன் பளுத்தாங்குமிடத்திலிருந்து நேராகக் கீழே வரையப்படும் கோடு அதன் அடிவாரத்துக்குள் விழுந்தால் தான் அது நிலையில் நிற்கும்; இல்லாவிட்டால் விழுந்துபோம் என்பது சித்தாந்தம். அதன்படியே அநேகர் அந்தக் கோபுரத்தின் மையத்தினின்றும் கீழே ஒரு நேர்க்கோடு விழுவதாய் நினைத்துக் கொண்டால் அது அதன் அடிவாரத்துக்குள்ளேதான் விழும்;

அதனாலேதான் அந்தக் கோபுரம் நிலைநிற்கிறதென்று சொல்லுகிறார்கள். சிலர் அப்படிச் சொல்லுவதற்கு ஆதாரமொன்றுமில்லை; அது கட்டிய உறுதிப்பாட்டினால் ஸ்திரமாயிருக்கிறதென்கிறார்கள்.

பூகம்பத்தினால் கோபுரம் சாய்ந்துபோயிற்றென்று சிலர் நினைக்கிறார்கள்; இன்னும் சிலர் கட்டும்போதே அந்த உத்தேசத்தோடு கட்டப்பட்டதென்கிறார்கள்; இப்படி நினைக்கிறதே அநேக சில்ப சாஸ்திரிகளுக்கு யுக்தமாகத் தோன்றுகிறது. இந்தக் கோபுரத்தையே ஒரு சாதனமாகக்கொண்டு (Galileo) கலிலியோ என்னும் வானசாஸ்திரி பூமியின் கவர்ச்சியைப்பற்றின அநேக நியாயங்களைக் கண்டுபிடித்தார்.

சிநேகமும் சிநேகரும்.

(தொடர்ச்சி.)

போனமாதத்துச் சஞ்சிகையில் சிநேகத்தைப்பற்றி ஒருவாறு எழுதியிருக்கிறோம். நமக்கு மேன்மேலும் உபந்நியாசம்பண்ணும்படி வல்லமையிருந்தால் இந்த ஒரே விஷயத்தை ஓயாமல் அநேகமாதங்களில் தொடர்ச்சியாய் எழுதிக்கொண்டுவரலாம்; ஆயினும் இந்த மாதத்துச் சஞ்சிகையில்மாத்திரம் கொஞ்சம் எழுதத்துணிகிறோம்.

பிராணனோடு பிராணனாய் ஒத்திருக்கிற சிநேகத்தைக் கலைத்து ஒருவர்க்கொருவர் பகையுண்டாக்கத்தக்க காரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளில் ஒன்று போனமாதத்தில் சொல்லியிருக்கிறோம். சிநேகிதர்களுக்கு விரோதம் எந்தக் காரணத்தால் நேர்ந்தாலும் சரிதான், அதைப் பொறுப்பது வருத்தம். அந்த விரோதம் துர்மார்க்கத்தனத்தாலும் அறிவின்மையாலும் உண்டாகுமாயின், மற்றெந்தக் காரணத்தாலுண்டாகிற விரோதமும் அதற்கு இடன்று. மனவுறுதியில்லாமையாலும், அனுதாபப்படுகிற சக்திக்குறைவினாலும், நம்பகமற்றிருத்தலாலும், ரஹஸியச் செய்திகளை வெளிப்படுத்துகிறதன்மையாலும், கள்ளம்கவடற்று வெளிப்படையாயிராமையாலும் வெகுவாய் சிநேகத்திற்கு அழிவு நேரிடுகின்றது. குசோத்தியமான வார்த்தைகள் சிநேகத்திற்குச் சத்துருவாயிருக்கின்றன. முன்பின்பாராமல் வேடிக்கையாய்ப் பேசுவதுபோல கொரூரமான வார்த்தைகள் சொன்னால் அது எவ்வளவு நெருங்கின சிநேகிதனாயிருந்தாலும் அம்புபோலப் போய்ப் பொத்தும். எவன் வாயைக்கட்டாமல் தனக்குத் தோன்றியபடி பேசத்துணிகிறானோ அவனுக்கு ஒருபோதும் சிநேகிதனும் நீடித்திருக்கமாட்டான். உண்மையான சிநேகிதர்கள் அப்படிப்பட்ட மனிதரோடு நெருங்கமாட்டார்கள். நாலுபேர் கூட்டங்கூடியிருக்கும்போது பரிஹாஸமாயும் குசோத்தியமாயும் தூஷணமாயும் வார்த்தைசொல்லுகிற சுபாவமுள்ளவன் ஒருநாளும் நமக்கு ஒத்த சிநேகிதனாகமாட்டான். இப்படி மிகவும் அற்பமான செய்கையுள்ளவர்கள்மாத்திரமே நேசிக்கத்தகாதவர்களல்ல; அப்படியே மேலான அறிவும் ஒழுக்கமுமுடைய பெரியோர்களும் நேசிக்கத்தகாதவர்கள்தான். ஏனெனில் அவர்களுடைய நண்பர்கள் அவர்களைப்போலிராமல் சாதாரணமாயிருந்தால், அப்படியிருக்கக்கூடாதென்று தங்

களைப்போலிருக்கும்படி அவர்களைச் சிக்ஷிக்க முயலுவார்கள். அப்படிச் சிக்ஷிப்பது மற்ற சாதாரணமான ஜனங்களுக்குப் பொறுக்காது. தாங்கள் சம்மதித்திருக்கிற சில துர்க்குணங்களை நல்ல ஒழுக்கமுள்ள பெரியோர்கள் ஒத்துக்கொண்டிருக்கமாட்டார்களென்று, அவர்களோடு ஒருவரும் நேசிக்கவேண்டுமென்கிற எண்ணமுங்கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்ட மகான்களை நாம் புகழ்ந்துபோற்றலாம். அதுவேதவிர அவர்களோடு ஒத்து நம்முடைய ரஹஸியங்களையெல்லாம் சொல்லிக்கொள்ளும்படியான சிநேகிதராக்கிக்கொள்ளக்கூடாது. பின் நாம் சேர்க்கத்தக்கவர் யாரென்றால், நாம் எந்தெந்த குணங்கள் நம்மிடத்திலிருக்கலாமென்று சம்மதித்திருக்கிறோமோ, அந்தக் குணங்களைத் தாங்களும் ஒத்துக்கொண்டு இருக்கிறவர்கள்தான். இதற்கு மாறாயும் அநேகமிருக்கின்றன. மிகவும் ஆவசியகமான குணங்கள் தங்களிடத்திலிராவிட்டால் அந்தக் குணங்கள் தங்களுக்கு வேண்டுமென்று அபேக்ஷையுடையவர்கள் அந்தக் குணமுடையவர்களையே நேசிக்கிறார்கள்.

உலகத்தில் அநேகர் வழவழவென்று பேசிக்கொண்டு உண்மையை வெளிப்படுத்துகிறதில்லை. அதனால் அவர்களுடைய சிநேகம் நீடித்திராதபடிக்கு ஒருவரையொருவர் விரோதப்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஆதலால் அந்த வழக்கங் கூடாது. எந்தச் சங்கதி நேர்ந்தாலும் ஒருவர்க்கு ஒருவர் கபடம்விட்டு நேராய்ப் பேசித் தீர்மானஞ்செய்துவிடுவதே நல்லது. வெகுவாய் விரோதமுண்டாவதற்குக் காரணம் அப்படிச் செய்யாமலிருப்பதுதான். உலகத்தில் தங்களைப்பற்றி அபாயத்தையுண்டாக்கும்படியான பேச்சொன்று நடந்தால் அதை நேரிலேபோய் ஒருவர்க்கொருவர் ஸமாதானப்படுத்திக்கொள்ளவேண்டியது. அப்படி ஒருவரும் செய்கிறதில்லை. உலகவழக்கமென்னவென்றால், அப்படி ஏதாவது நடந்தபக்ஷத்தில், தாங்கள் எதிரிலேபோய் வார்த்தைசொன்னால் என்ன கெடுதிநேரிடுமோ, இப்படியே சாந்தமாய் அடங்கிப்போகட்டுமென்று வெகு விநயமாய்க் கடுதாசி எழுதியனுப்புகிறார்கள். அப்படிச் செய்வது மிகவும் பிசகு. அதுவே பிரமாதமாய் விளைகிறது. அப்படிப்பட்ட விஷயங்களில் ஒருபோதும் பத்திரிகை எழுதியனுப்புவது சரியன்று. ஒருவரையொருவர் எதிரே கண்டு கபடத்தைவிட்டு உண்மையை வெளிப்படுத்தி ஒத்துப்போவதே நியாயமானது. நாம் எவ்வளவு மரியாதையாயும் வணக்கமாயும் அவனை மேன்மைப்படுத்தி எழுதினாலும் அவன் நம்மேல் மிக்ககோபங்கொண்டு எந்த மூலையில் சாக்கு அகப்படப்போகிறதென்று காத்துக்கொண்டிருக்கிறபடியால் எதிலாவது ஒரு பதத்தில் தப்புகண்டுபிடித்து நம்மேல் கோபத்தை இன்னும் அதிகமாக்கிக்கொள்ளுவான். ஆதலால் அவன் கோபத்தைத் தணியச்செய்யவேண்டுமென்று நமக்குக் கருத்திருக்கும்பக்ஷத்தில் எவ்வளவு சாந்தமாய் அவனுக்குக் கீழ்ப்படிந்து கடிதமெழுதினாலும் உபயோகமில்லை. அவனைப்போல் நாமும் அகங்காரங்கொண்டிராமல் எதிரேபோய் வணங்கி கடுதாசியில் எழுதுவதை வாயினால்சொல்லி அடக்கவேண்டும். அப்படி நாம் கீழ்ப்படிவதனால் நம்முடைய மேன்மைக்கு ஏதாவது கொஞ்சம் குறைவு நேரிடுமென்று நினைக்கிறீர்களோ? அது ஒருபோதுமுண்டாகாது. அவனைக் கண்டு நாம் அவனிடத்தில் சிநேகத்தைச் சரியாய்ப் பாராட்டிவந்த விதத்தையும், அதனால் கிடைத்த லாபத்தையும் நன்றாய்ப் போதித்து ஸமாதானமாய்ப் போகவேண்டும். அப்படி நாம் வணங்குவதனால் ஏதோ நம்முடைய லாபத்தை இழந்துபோகிறதாய் ஒருபோதும் எண்ணவேண்டாம்.

சிநேகிதருக்குள் ரஹஸிய சங்கதிகளைப்பற்றி எவ்விதமான ஏற்பாடும் தீர்மான முடிவும் சரிப்படவில்லை. 'என்னோடுசொன்னால் உன்காரியம் நிறைவேறும். அவசியம் சொல்லித் தீரவேண்டியதாயிருந்தால் ஒருவேளை சொல்லலாம். மற்ற ஏகாந்தச் செய்திகளை ஒருபோதும் என்னோடு நீ சொல்லவேண்டாம்' என்று ஒரு பெரிய பண்டிதர் தன் சிநேகிதனுக்கு எழுதியிருக்கிறார். ஆதலால் நம்மால் கூடியவரையில் அந்தரங்க சங்கதிகளைக் கேளாமல் ஒழிந்திருப்பதே தப்பித்துக்கொள்ளுவதற்குச் சரியானவழி. அவசியம் நாம் கேட்டே தீரவேண்டிய சங்கதிகளும் அநேகமாயிருக்கும். சில செய்திகளை நாம் கேளாமல் ஒதுக்கிவிட்டால் நம் சிநேகத்திற்கே அழிவு வரும்படியாயும் அநேக சமயங்களுண்டாகலாம். அவைகளைக் கேளாவிட்டால் தீராது. கேட்டசெய்திகளை ஜாக்கிரதையாய் வெளிவிடாமல் காப்பாற்றுவதுதான் மிகவருத்தம். சிலர் தாங்கள் மிகவும் பிராமாணிகர்போலவும் நம்பத்தக்கவர்போலவும் வேஷம்போடுகிறார்கள். அதைப்பார்த்து மோசம்போய் அவர்களைப் பரிசயம்பண்ணிக்கொண்டு நம்முடைய உள்மர்மங்கள் எல்லாவற்றையும் சொல்லிக்கொள்ளும்படியான பிராணசிநேகிதர்களாக்கிக்கொண்டால் உடனே சச்சரவு உண்டாகி ஒருவரை ஒருவர் விரோதிக்கும்படி நேரிடுகிறது. ஆதலால் இன்னாரோடு இன்னசெய்தி சொல்லலாம்; இன்னாரோடு சொல்லக்கூடாதென்பதை முதல் முதல் நாம் ஆலோசித்துச் செய்யவேண்டியது. எவ்வளவு உயிரோடு ஒத்த சிநேகிதர்களாயிருந்தாலும் சரிதான், அவன், இவன் சரியானவன் என்று நம்பவேண்டுமென்று தன்னோடு சொன்ன சங்கதிகளை வெளிப்படுத்தி உலகமெங்கும் விதைப்பானானால், அதைக்கேட்டு எவர்தான் கோபங்கொள்ளாமலிருப்பார்கள்.

இன்னொருவிதமான மனிதர் இருக்கிறார்கள். அவர்களோடு சிநேகம்செய்து தப்பி மீளுவது வெகு வருத்தம். அவர்கள் எப்போதும் நம்முடைய காரியவேளை அவசரவேளை ஒன்றும் தெரியாமல் நச்சுநச்சென்று அலப்புவார்கள். அவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம் நம் காரியங்களுக்குத் தடைசெய்து நம்மைக் கெடுத்துவிடவேண்டுமென்கிற எண்ணமன்று. நமக்கு நன்மைசெய்யவேண்டுமென்றே அவர்களுடைய எண்ணம். பின் ஏன் நம்முடைய சமயாசமயம் தெரியாமல் அலப்புகிறார்களென்று கேட்டால், எப்போ போய்க் கேட்கப்போகிறோம், எப்போ போய்க் கேட்கப்போகிறோமென்கிற ஆவலினாலும் யுக்தாயுக்தங்களை ஆராய்ந்துபார்க்கத்தக்க தன்மையின்மையாலுமே தொந்தரைசெய்கிறார்கள். எப்படிப்பட்டதானாலும் சரி, தம்முடைய காரியங்களில் நமது நல்ல யோசனையில்லாத சிநேகிதர்கள் தாங்கள் கூடவந்து கலந்துகொள்வார்களாகில் நாம் அதை மெல்லவும்போகாமல் விழுங்கவும்போகாமல் அவஸ்தைப்படவேண்டுமேதவிர வேறுவழியில்லை. அவர்கள் தங்களுக்குத் தோன்றியதைச் செய்யவேண்டும். அதை நாம் நிராகரிக்கவும்வேண்டாம், அங்கீகரிக்கவும்வேண்டாம். வாயை மூடிக்கொண்டு நமக்குத் தோன்றியபடி நடத்திவிடுவதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லையே என்று சிலர் சொல்லுவார்கள். அது உண்மைதான். ஆனால் அது மிகுந்த சாந்தியும் பொறுமையும் உடையவர்களுடைய காரியம். அப்படிப் பொறுத்திருப்பதிலும் ஒரு கெடுதியிருக்கிறது. நாம் எவ்வளவு வாயை மூடிக்கொண்டிருக்கிறோமோ அவ்வளவும் அவர்களுக்கு மேன்மேலும் தன் அபிப்பிராயங்களைத் தெரி

விக்க ஓராதாரமாகிறது. ஏனெனில் நாம் வாயைமூடிக்கொண்டிருக்கவே அவன் தான் சொல்லுவதையெல்லாம் நாம் அங்கீகரிக்கிறோமென்று நினைக்கிறான். அதனால் முன்பின் ஒன்றும் ஆலோசியாமல் தனக்குத் தோன்றியபடி தன் அபிப்பிராயங்களைச் சொல்லுகிறான். கடைசியில் அவன் நமக்கு நன்மைசெய்யப்போய்த் தீமையாய் விளைகிறது. ஒருதடவை பட்டது போதுமென்று அவ்வளவோடு அவன் சிநேகத்தை ஒழித்துவிடலாமென்றாலோ அதற்குமில்லை. அவன், தான் சொல்லிய படி செய்ததனாலே நம்காரியங் கெட்டுப்போயிற்று என்று தெரிந்தால் உடனே நம்மண்டைவந்து அய்ய! அப்போ நான் சரியாய் நன்மையுண்டாகுமென்றே யோசித்துச் சொன்னது. தெய்வசங்கல்பத்தால் காரியங் கைகூடாமற்போயிற்று. அதற்காக சங்கடப்படலாமா? என்மேல் வேறு அபிப்பிராயங்கொள்ளக்கூடாது என்று இப்படிப் பலவிதமாய் வேண்டுவான். இப்படிப்பட்டவர்களோடு சிநேகஞ்செய்வதைப்போலத் துக்ககரமானது வேறொன்றுமில்லை.

கடைசியில் நமது வயதெல்லாம் சென்று விருத்தாப்பியதசை வந்தபோது நம் அடிநாளைச் சங்கதிகளை நினைத்துப்பார்த்தால் அப்போதைக்கிப்போது வெகு மாறுபாடுள்ளதாயிருக்கும். ஆனால் அவையெல்லாம் ஒரேகாலத்தில் செம்மையாய் நினைப்பிற்கு வராது. ஒவ்வொருசமயங்களில் ஒவ்வொன்று ஞாபகம் வரும். அக்காலத்தில் நாம் பிறந்ததுமுதல் நமக்கு இருந்த தோழர்களைக் கவனித்துப்பார்த்தால் நமக்குக் கிடைத்திருந்த சிநேகிதர்கள் கணக்குவழக்கு இல்லையென்று நன்றாய்த் தெரியவரும். அவர்கள் ஒவ்வொருவரும் இப்போது எங்கேயிருக்கிறார்களென்று நாம் ஆராயத்தொடங்கினால் சிலர் தேசாந்தரத்திற்குப் போயிருப்பார்கள். அவர்களை நாம் மறுபடி ஒருபோதும் காணப்போகிறதேயில்லை. நாம் செய்த தப்பிதத்தினாலேயே சிலர் நம்மைவிட்டுப் பிரிந்துபோயிருப்பார்கள். சிலரை நாமே வேண்டுமென்று ஒதுக்கிவிட்டிருப்போம். சிலர் நம்மைப்பார்க்க வரவர மேலான அதிகாரம்பெற்று அதனால் நம்முடைய சிநேகத்தை மறந்துபோயிருப்பார்கள். சிலர் சிநேகத்தைச் சரியாய்ப் பாராட்டிவந்தபோதிலும் மிகவும் லோபகுணமுள்ளவர்களாயும் துர்மார்க்க சிந்தையுள்ளவர்களாயும் இருந்திருப்பார்கள். அதனால் இப்படிப்பட்ட அற்பசகவாசம் நல்லதல்லவென்று நாம் அவர்களை விலக்கிவிட்டிருப்போம். நமது வாழ்நாளில் நமக்கு என்னசங்கடங்கள் நேரிட்டாலும் அவைகளுக்கெல்லாம் பின்னிடையாமல் இடுகொடுத்து நம்மைக் காப்பாற்றினவர்களும் ஒருவர் இரண்டுபேர் இருப்பார்கள். அப்படிப்பட்ட உயிர்த்தோழர்கள்கூட ஒவ்வொரு பெரிய தப்பிதங்கள் நேர்ந்து அதனால் பிரிந்துபோயிருப்பார்கள். அதனாலுண்டாகிய துக்கம் எத்தனைநாளானால் நம்மனதைவிட்டு நீங்கும்? இப்படிப் பலவிதமாய் நம்மைவிட்டுப் பிரிந்துபோன சிநேகிதர்களுக்கும் நமக்கும் இருக்கிற வேறுபாடு எவ்வளவென்று நாம் சொல்லுகிறது. அவைகளைப் பலவாறு சொல்வதில் பயனில்லை. போனதைச் சொல்லுகிறவன் பித்தனல்லவா? பின் நாம் செய்யவேண்டுவதென்னவென்றால், இனிமேலாவது அவரவர்களுடைய குணங்களை ஆராய்ந்தறிந்து நேசித்து மறுபடி ஒருநாளும் ஒருவர்க்கொருவர் மனவருத்தமுண்டாகிப் பிரிந்துபோகாதபடிக்கு நம்மைக் காத்துகொள்வதேயாம். அப்படிச் செய்வதாலுண்டாகிய சந்தோஷத்திற்கும் மனக்களிப்புக்கும் இடு உலகத்தில் வேறுண்டோ?

தொழிலாளிகளின் பகல்மோசம்.

முன்பின் ஒருநாளும் பட்டணமென்பதையே அறியாத ஒரு காட்டுப்புறத்தான் பட்டணம்போய் அங்குள்ள வேடிக்கைகளைப் பார்த்துவரவேண்டுமென்கிற ஆசைகொண்டு ஒருதரம் அவ்விடம் போய்வந்தான். முதற்றடவையாகத் தான் பட்டணம்போயிருந்த போது, தான் கண்டறிந்ததை அடியிற்கண்டவிதம் ஒருவாறு சொல்லுகிறான்.

இதற்குமுன்னே நான் பட்டணம்போயிராவிட்டாலும், அவ்விடத்தில் உத்தியோகம்பண்ணிக்கொண்டிருந்த என்னுடைய மாமன் இன்னவிடத்தில் இந்தத் தெருவில் இருக்கிறாரென்பதுமாத்திரம் கேள்வியினால் தெரியும். வாயிலே வழியிருக்கிறது என்று அந்த அடையாளத்தைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டேன். பட்டணத்திற்குள் நுழையும்போது வண்டிமுதலியவைகளுக்கு வரி வாங்குகிறார்களென்றும் கேள்வியுண்டே; அப்படியே அதை முதல்முதல் பார்த்தேன். அங்கே என் மாமனிருக்கும் இடத்தைச் சொல்லி விசாரித்ததின்பேரில், அப்புறம்போய் விசாரிக்கச் சொன்னார்கள். சுமார் அரைமைல் தூரமட்டும் ஒரு அதிசயத்தையும் காணேன்; அப்பால் போகப்போக விசாலமும் நெருக்கமுமான அநேக தெருக்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடியிருப்பதையும், அவைகளில் ஜனங்களும் குதிரைவண்டிகளும் மாட்டுவண்டிகளும் கைவண்டிகளும் ஓயாமல் சாய்ந்துகொண்டிருப்பதையும் கண்டேன். வீடுகள் ஒன்றோடொன்று இடிப்பதுபோலிருந்தன; சில வீடுகளில் இரண்டுமூன்று மெத்தைகளுமுண்டு. திக்குதெரியாமல் அங்குமிங்கும் அலைந்து பலபேர் பலவழிகாட்டத் தட்டுத்தடுமாறிக் கடைசியில் மாமன்வீட்டைச் சேர்ந்தேன். ஸ்நானம்பண்ணத்தகுந்த குளம் அருகில் இல்லாமைகண்டு, கிணற்றங்கரையில் ஸ்நானமுதலியவற்றை முடித்துக்கொண்டு போஜனம்பண்ணினேன்; அதற்குள் மூன்று மணியாகிவிட்டது. பிறகு கடை கடைத்தெருவு சுற்றிவருவோமென்று வேடிக்கையாகப் புறப்பட்டேன்.

கொஞ்சதூரம் போனபின்பு, ஒரு தையற்காரன் ஜவளிவர்த்தகன் ஒருவனோடு, 'என் பேச்சை நம்புங்கள் ஐயா; இன்றை சாயங்திரம் உங்கள் உடுப்பை அகத்தியம் சேர்ப்பிக்கிறேன். நான் என்ன, மோசக்காரனா? என் பேச்சைத்தான் பாருங்களேன்' என்று சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். பார்த்தையா! தையற்காரன்கூட இவ்வளவு நாணயஸ்தனாவென்று எண்ணிக்கொண்டு அப்புறம் சற்றுதூரம்போக, அங்கே ஒரு மூன்றடுக்கு

மெத்தையின் அண்டையில் பெரியமனிதர்கள் அநேகம்பேர் நல்ல உடுப்புமுதலியவை அணிந்துகொண்டு வண்டிகளில் வந்து இறங்கிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் தன் கூலிவண்டிக்காரனைப்பார்த்து, அப்பா மறுபடியும் எனக்கு வண்டிதேவை, ஐந்துமணிக்கு இங்கே வருவாயா? உன்னை நம்பியிருக்கட்டுமாவென, வண்டிக்காரனும், ஐயா நல்லது, ஒரு வினாடி பிசகாமல் அந்நேரத்துக்குத் தயாராயிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு வண்டியைத் திருப்பிக்கொண்டுபோய்விட்டான். அதையும் பார்த்த்துக்கொண்டு அப்புறம் நாலுமார்தூரம்போக, மாம்பழம் விற்போன் ஒருவன், தன்னிடத்து பேரம்பண்ணுகிறவனைப்பார்த்து: பழத்தை அறுத்துத் தின்றுபார்த்து பணங்கொடுமையா; புளிப்பானால் போட்டுவிடும்; உங்களிடத்தில்தானா பொய்பேசப்போகிறேன் என்றான். அதற்குச் சமீபத்தில் துணிக்கடைக்காரர்களில் ஒருவன் தன்னிடத்தில் சீட்டித்துணி வாங்கவந்தவனை நோக்கி: ஐயா! நம்மிடத்தில் பேரங்கிடையாது; கண்டிப்பானவிலை கஜம் நான்கு அணா; அதுவே எனக்குக் கொண்டகிரயம் ஆகவில்லை; சம்மதியானால் எடுத்துக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் இன்னும் எங்கேயாவது தேடலாம்; கஜம் கால்ரூபாய்க்குக் குறைச்சலாக அகப்பட்டால் நான் சும்மா கொடுத்துவிடுகிறேன் என்று உறுதியாகச் சொன்னான். இதையெல்லாம்பார்த்து இவ்விடத்தில் அற்பவேலைக்காரர்கள்கூட எவ்வளவு நம்பிக்கையுள்ளவர்களென்று ஆச்சரியப்பட்டேன். கடைத்தெருவைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வீட்டுமுகம் திரும்பிவரும்போது, வழியில் ஒரு பட்டணத்தானும் ஒரு வெளியூரானும் என்னவோ வியாஜியத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு என்னோடுகூடவே வந்தார்கள். நாட்டுப்புறத்தான் என் வழக்கு என்னமாயிற்று, ஆறுமாசத்துக்கு முன்னமே என் பக்கம் தீர்ப்பாய்விடும் என்று சொன்னீரே; இன்னும் ஒன்றையும் காணேனே என்று கேட்டதற்கு: அவனுடைய வழக்கை நடத்தும் அப்பட்டணத்தான், உமக்கொன்றும் பயமில்லை; உம்முடைய நியாயம் வீண்போகுமா? நாங்கள் என்னசிரமப்பட்டாலும் அது ஆகிறபோதல்லவோ ஆகும்; உமக்குக் கடுதாசி எழுதவேண்டுமென்று எண்ணியிருந்தேன், நீரே நேராக வந்துவிட்டது நல்லதாயிற்று; உம்முடைய வழக்குக்கு இன்னும் கொஞ்சம் பணச்செலவு செய்யவேண்டும்; நீர் இங்கிருக்கவேண்டுமென்ற அவசியமில்லை; நான் எல்லாக்காரியங்களையும் பார்த்துக்கொள்ளுகிறேன்; நீர் அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டுவதில்லையென்று உத்தரம்சொன்னான். இதைக் கேட்கவே, பட்டணத்தார் வெகு உண்மையானவர்களென்று நிச்சயித்தேன். நான் போனவழியிலேயே வந்தேனானாலும் வரும்போது வழி கொஞ்சம் தடுமாறிப்போயிற்று; எப்படியோ விழுந்து அலைந்து மாமன் வீடு வந்துசேர்ந்தேன்.

அதற்குள்ளே அவரும் வந்திருந்தார்; என்னைக் கண்டவுடன் சற்று க்ஷேமவிசாரணை செய்து போஜனத்துக்கு என்னையும் அழைத்துக்கொண்டு உட்கார்ந்தார். சாப்பிடும்போது நான் கடைத்தெருவு போய்வந்த சங்கதியையும், அங்கு நான் கண்டவற்றையும் சொல்லி அவ்வூரார் நாணயத்தை மிகவும் மெச்சிக் கொண்டாடினேன். அப்போது மாமன் சொன்னதாவது: அடா பைத்தியக்காரா! பட்டணமுழுதும் பொய்யும் புளுகும் நிறைந்ததாயிற்றே; நீ இவ்விடத்துக்குப் புதிதாய்வந்தபடியால் தப்பு அபிப்பிராயங்கொண்டிருக்கிறாய்; மேற்பார்வையினால் நீ மோசம்போனாய்; நாலுநாள் இருந்து பழகினால் உள்மர்மம் தெரியும். நீ சொன்ன தையற்காரன் பத்துநாளைக்குள் தன் வார்த்தையை நிறைவேற்றினானால் அதிசயம்; கூலிவண்டிக்காரன் மறுபடியும் வருகிறதாகச் சொன்னதும் அப்படியே; இன்னும் எங்கேயாவது கிராக்கி அகப்பட்டால் ஓடிப்போவான்; நாளைக்குப் பழக்காரனண்டைபோய் ஒரு பழமெடுத்து அறுத்துப்பார்த்து நன்றாயிருக்கவில்லையென்று போட்டுவிடு; அவன் எடுத்துக்கொள்ளுகிறானா பார்; அதன் விலையை எப்படியாவது சண்டைபோட்டு உன்னிடத்தில் வாங்குவானேயல்லாமல் விட்டுவிடமாட்டான்; கஜம் கால்ரூபாய் சொன்ன துணிக்காரனோ பேரம்பண்ணுவோனைப் பரிசோதிக்க அப்பேச்சு பேசினானேயன்றி உண்மையாகவல்ல; வியாஜியம் வழக்குகளைப்பற்றி எத்தனையோ மோசங்கள் நடக்கின்றன. இப்படி எதை எடுத்தாலும் அது பொய்யாகமுடியும். உண்மை வாக்குத்தத்தம் உறுதிமொழி எங்கே அதிகமாகப் பேசப்படுகின்றனவோ, அங்கே அவை காணப்படமாட்டா; வாஸ்தவமாய் உண்டானால் அவைகளைப்பற்றி ஏன் அவ்வளவு வாயினால் சொல்லவேண்டும். உள்ளே ஒன்றுமில்லாவிட்டால்தான் மேலுக்கு ஜம்பம் என அறிந்துகொள்ளென்று இவ்வளவுதூரம் விஸ்தாரமாகச் சொன்னார். அதைக் கேட்டவுடன் எவ்வளவோ மெய்யென்று நம்பியிருந்ததெல்லாம் ஒரு நொடியில் ஒன்றுமில்லாமற்போயிற்றேயென்று எண்ணிக்கொண்டு: நல்லது, இவ்வூரில் உண்மையானவர் ஒருவருமில்லையா என்று கேட்டேன். அதற்கு அவர், எத்தனையோபேர் இருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் அதைக்குறித்து வீண்பெருமை பாராட்டமாட்டார்கள்; வீணாய் வாயினால் கொட்டிக்குளறுவதில் என்ன பயன் என்றார். நான் அதைக் கேட்டு அதிசயப்பட்டுப் பட்டணத்தில் எவ்வளவு மோசங்கள் நடக்கின்றன பார்த்தையா! இவையெல்லாம் வெளிக்கு வேஷமென்று இப்போதல்லவோ தெரிந்தது; பட்டணத்துப் புரட்டென்பது பொய்யல்ல. என்னைப்போல் ஒன்றுந்தெரியாத நாட்டுப்புறத்தான் சரக்குவாங்கவந்தால் எப்படி ஏமாந்துபோவான் என்று சிந்தித்துக்கொண்டு இராவெல்லாம் அதேஞாபகமாயிருந்தேன்.

மறுநாள் போய்ப்பார்க்கிறபோது என் மாமன் சொன்னதெல்லாம் சரியாகவேயிருந்தது. பட்டணத்தாரை என்ன சொல்லலாம், ஆளை ஆளாகவே விழுங்கிவிடுகிறார்கள். இந்த வேடிக்கையையும் இம்மாதிரியான இன்னும் பல வேடிக்கைகளையும் சிலநாளிருந்து சாவகாசமாய்ப் பார்த்துவிட்டு ஊருக்கு வந்துசேர்ந்தேன்.

இக்கதையோடுகூட யாவரும் கவனிக்கத்தக்கதாய் ஓரிரண்டு விஷயம் கூட்டுகிறோம். யாரொருவன் நம்மிடத்தில் அதிக அன்பும் ஆதரவுமாயிருக்கிறதாகப் பெருமைபாராட்டுகிறானோ, அவனை நம்முடைய அந்நியோன்னிய சிநேகிதனாக எண்ணக்கூடாது. ஏனெனில் அப்படிப்பட்டவன் பெருமையைப் பெரிதாகப் பார்ப்பானேயன்றி சிநேகத்தை அவ்வளவாக நினைக்கமாட்டான்; ஆகையால் ஒருவனையும் நிலையாய்ப் பிடியாமல் ஒருவனைவிட்டு ஒருவனைச் சிநேகம்பண்ணிக்கொண்டிருப்பான். சமாசாரபத்திரிகை பிரசுரஞ்செய்கிறவனுக்கு நாம் ஏதாவது ஒரு கதை எழுதியனுப்பினால், அவன் அதைப் பட்சமாய் வாங்கிக்கொண்டதினாலேயே நாம் எழுதிக்கொடுத்தது சீக்கிரத்தில் அச்சில் விழுந்துப் பிரசித்தமாகுமென்று எண்ணக்கூடாது; ஐந்து ஆறுமாசம் சும்மாவைத்திருந்து உபயோகமில்லையென்று திருப்பிவிட்டாலும் விடுவன்.

சிறுபயல்களைக் கற்பிக்கிறவர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமென்னவெனில்; அற்பவிஷயங்களானாலும் நம்பிக்கையாயிருக்கவேண்டுமென்றும், தங்களுடைய புத்திக்கும் சக்திக்கும் எட்டாதகாரியங்களைச் செய்கிறதாக வாக்குக்கொடுக்கக்கூடாதென்றும் அப்பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். பாலியத்தில் இம்மாதிரியாகப் பழக்கினால் பிற்காலத்தில் அவர்களே நிறைவேறாத வீண்பேச்சு பயிரில்லாமற் களைநிறைந்த தோட்டத்திற்கொப்பாகுமென்று கண்டுகொள்ளுவார்கள்.

மந்திர வீணை

அல்லது

மெய்மை பொய்மையைப்பற்றிய கதை.

(தொடர்ச்சி.)

கொஞ்சதூரம் போகையில் வெண்பட்டாடை உடுத்து, கையில் ஒரு கண்ணாடி ஏந்திக்கொண்டு தேஜசுபோன்ற தலையுடைய ஒரு பெண்பிள்ளை அந்த ஸத்தியவான் எதிரேவந்து தோன்றி, பிள்ளாய்! என்பெயர் ஸத்தியம், உன்னை என் பிள்ளையாகக் கொண்டாடுகிறேன்; நீ எப்போதும் தீமையை எதிர்த்துநில், நல்லதையே செய், உனக்கு இன்பமுண்டாகும். அஸத்தியத்தின் கையில் அகப்பட்டுக்கொண்டால், முழுகிப்போவாய் என்று புத்திசொல்லிவிட்டு ஆகாயத்தில் மறைந்துபோ

ருன். இறுவன் நாம் புறப்படும்போதே நல்ல சகுனம் ஆயிற்று; தாயானைப்போல் எதிரேவந்துநின்று இவ்வளவு அன்போடு நமக்கு நல்ல புத்திசொல்லிவிட்டுப்போனது ஒப்பற்ற உலகமாதாவேயல்லாமல் மானிடஜாதியல்ல; இது நாம் பண்ணிய புண்ணியத்தின் பலனேயன்றி வேறல்ல. இனி நான் ஒருபோதும் ஸத்தியத்தைக் கைவிடேன்; கடவுளும் எனக்கு அப்படிப்பட்ட நல்ல எண்ணம்கொடுப்பாரென்று நம்புகிறேன் என்று இவ்விதமாய் மனதில் எண்ணிக்கொண்டு யாதொரு கவலையுமில்லாமல் மனக்களிப்புடன் தனது வழியைத் தொடர்ந்துபோனான். மனித சந்தடியேயில்லாமல் மரங்களும் செடிகளும் புற்பூண்டுகளும் நிறைந்து கண்ணுக்கு ரமணீயமான இடத்தில் காலங்காலையில் பட்சிகள் பாடவும், மான்கள் துள்ளி விளையாடவும், மற்றுமுள்ள குற்றமற்ற ஜந்துக்கள் இனிப்பாயிருக்கவும் கண்டால் மனிதஜன்மம் உள்ளவனானால் யாருக்குத்தான் ஆனந்தமாயிராது? வேடிக்கையாய் வழிநடந்துகொண்டிருக்கும்போது ஸத்தியவான் போதுபோக்காகத் தனது மந்திரவீணையை எடுத்து மீட்டினான்; அருகிலிருந்த மிருகஜாதி பட்சிஜாதி ஜந்துக்கள் பொய்புரட்டு கள்ளம்கபடம் அறியாதவைகளானபடியால் அதை லட்சியம் பண்ணாமல் தத்தம் விளையாட்டையே பாராட்டின.

நாலைந்து மைல் நடந்தபிறகு ஸத்தியவந்தன் ஆயாசத்தினால் சோர்வடைந்து சற்று இளைப்பாறுவோமென்று பாட்டையிலிருந்து கொஞ்சம் ஒதுங்கிப்போய் செடி மறைவு உள்ள ஒரு ஏகாந்தமான இடம்பார்த்து பஞ்சசயனத்துக்கும் எண்மடங்கு அதிகமாய் மெத்தென்றிருந்த புல்லின்மேல் படுத்துத் தூங்கிவிட்டான். சற்று அயர்ந்து இளைப்பாறினானோ இல்லையோ, கோவென்ற ஒரு பெருஞ்சத்தம்கேட்டு திடுக்கிட்டு விழித்து இதென்ன ஆச்சரியம்! ஒருவருமில்லாத காட்டில் சத்தம் கேட்கிறதே; இது எப்படி உண்டாயிற்று; இதன் காரணத்தை அறியவேண்டுமென்று எழுந்திருந்து செடிமறைவிலேயே நின்றுகொண்டு நாலண்டையும் பார்த்தான்; சுமார் இரண்டுகாணி குறுக்குதூரத்தில் அவன் கண்டதாவது: அநேக ஆயிரம் வேட்டைக்காரர் வேட்டையுடுப்புகள் அணிந்து வேட்டைத்தடிகளோடு கூட கும்பல் கும்பலாயிருந்தார்கள். அவர்களுள் வியாபகர்களாயிருந்தவர்கள் பொன்னுடையுடுத்து பொற்றடியுங்கையுமாய் நின்றார்கள். ஒரு பெரிய கூடாரம் அடித்திருந்தது; சரீரமுழுவதும் பொன்னால் அலங்கரிக்கப்பெற்ற ஒரு பெரிய மனிதன் அந்தக் கூடாரத்திலிருந்து வெளியில்வந்தான். அப்போது அங்கிருந்தோர் அனைவரும் வணக்கமாய் நின்று சலாஞ்செய்தார்கள். மரத்தின் இலைகள் காற்றில் அசைவாடுவதும் காதில் கேட்கும்படி அவ்வளவு நிசப்தமாயிருந்தது. அப்போது அந்தப் பெரியமனிதன் தன்னுடைய வேலைக்காரர்களில் ஒருவனைக் கூப்பிட்டு மிகவும் தாகமாயிருக்கிறது, குடிக்கக் கொஞ்சம் நல்ல பானங்கொண்டுவா என்று உத்தரவுபண்ண, அவன்: மகாப்பிரபு! நான் என்னசொல்லப்போகிறேன், எனக்குக் கைகால் நடுக்கிறது; உண்மையான சங்கதி தங்களுக்குத் தெரிவிக்கிறேன். உயர்ந்த பானம்வைத்திருந்த பாத்திரத்தை காவற்காரர்கள் அஜாக்கிரதையினால் உருட்டிவிட்டார்கள்; என்மேல் தப்பிதமில்லை; தங்கள் கனம் அவர்களுக்குத் தகுந்த தண்டனைவிதித்தால் இனி அப்படி நடவாமலிருக்கும். இன்னும் அரைநாழிகைக்குள்ளே பானம் தயார்பண்ணித்தருகிறேன் என்று வினயமாய் விண்ணப்பஞ்செய்தான். அதற்குத் தலைவன்: இனி அவர்களுக்குத் தண்

டையிட்டுக் காரியமென்ன? என் தாகம் தீரப்போகிறதா? கொஞ்சம் தண்ணீராகிலும் கொண்டுவாவென்றான். இப்படி நடந்த சங்கதியெல்லாம் உன்னிப்பாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஸத்தியவான், ஆ திருடா! இந்த வேலைக்காரனை நான் அறிவேன்; கலைக்காகா தேசத்தில் குடியானவனும் நியாயாதிபதியும் இருந்த இடத்துக்குச் சமீபத்தில் பார்த்ததாக ஞாபகம்வருகிறது என்று எண்ணிக்கொண்டு மந்திரவீணையை மீட்டினான். இரண்டுநிமிஷத்துக்கெல்லாம் அரசனிடத்து செலவு பெற்றுக்கொண்டுபோன வேலைக்காரன் திரும்பிவந்து, ஓ அரசனே! என்னை ரட்சிக்கிறது தங்கள் பாரம். தங்களுக்காக வைத்திருந்த பானத்தை காவற்காரர்கள் உருட்டவில்லை; நானும் இன்னும் சிலருமாய்க் குடித்துவிட்டோம் என்றான். அரசன் என்னடா முன்னே ஒன்றுசொன்னாய், இப்போதொன்று சொல்லுகிறாய்? இப்படித் தப்புந்தாறுமாய் உளறுவது குடித்த மதமோ என்று கோபமாய்த் திட்ட, வேலைக்காரன்: ஐயா! அந்த வார்த்தைகளைச் சொன்னது நானல்ல; என்னை ஆபத்தில் மாட்டுவதற்காக ஒரு பிசாசு செய்தகாரியம்: நான் ஒரு பாவத்தையும் அறியேன்; தங்கள் வேலைக்காரர்களுக்குள் என்னைப்போல உண்மையானவன் அகப்படமாட்டான்; எனக்குக் கபடமென்பதே தெரியாது என்று தழதழத்த சொற்களால் சொன்னான்.

எப்போதும் மெய்மையை நாடும் சிந்தையுள்ள சிறுவன் இதுதான் நல்ல தருணமென்று புதரிலிருந்த பாம்பைப்போல சரேலென்று புறப்பட்டு அரசனண்டை வந்து தண்டனிட்டு, ஓ ராஜாவே! இந்த வேலைக்காரன்பேச்சை நம்பாதிருங்கள்; அவன் உண்மையென்று சொல்லுவதெல்லாம் பொய்; பொய்யென்று சொல்லுவதெல்லாம் மெய்; இவன் எனக்கு நன்றாய்த் தெரியும்; கலைக்காகா தேசத்தில் பார்த்திருக்கிறேன் என்றான். அப்போது வேலைக்காரன் பையனைச் சுடச்சுடப் பார்த்து, இந்தப் பயல் நம்மை இப்படிப் பேசுவனோவென்று கோபங்கொண்டான்; அண்டையில் ஒருவருமில்லாதிருந்தால் சிறுவனை ஒரே அமுக்காக அமுக்கியேயிருப்பான். அரசன் பையனைப்பார்த்து: நீ யார், என்னசெய்தி என்று விசாரிக்க, அவன் நான் ஸத்தியத்தின் பிள்ளை; என் பெயர் ஸத்தியவான்; ஸத்திய லட்சுமியினிடத்திலிருந்து ஆசீர்வாதம்பெற்றவன்; ஆகையால் பொய்க்கும் எனக்கும் காசுக்கு ஆகாது; பொய்சொல்ல அஞ்சாதவர்களை வெளிக்கு இழுத்துவிடுவதில் எனக்கு நிரம்பவும் சந்தோஷம். சித்தமுண்டானால் பிரத்தியட்சத்தில் ஒரு பரீட்சை பார்க்கலாம்; இப்போது இந்த மனுஷியனை சூதனா அல்லவாவென்று கேளுங்கள்; அவன் கொடுக்கும் பதில்சொற்கள் அதிசயமாயிருக்கும் என்றான். அரசனும் சிறுவன் சொற்படி செய்ய, அந்த வேலைக்கான்: ஐயனே! என்னைப்பற்றித் தங்களுக்குத் தெரியாதா? நான் சொல்லவேண்டியதென்னவிருக்கிறது; நான் மனதறிந்து ஒரு சூதும் செய்தறியேன் என்று இவ்வாறு சொல்லிக்கொண்டேயிருந்து ஸத்தியவானுடைய வீணையின் பலத்தினால் சட்டென்று தான் சொன்னதற்கு நேர்விரோதமாய், பிரபுவே! என் பேச்சில் உண்மையென்பதே கிடையாது; நான் கெட்ட மோசக்காரன்; மற்ற வேலைக்கார்ரர்களும் எனக்குக் குறைந்தவர்களல்ல. நல்ல பானத்துக்காகத் தாங்கள் பணங்கொடுக்கிறதுமாத்திரமேயல்லாமல் நான் வழக்கமாய் வாங்குகிறது மட்டமான பானந்தான். நான் இந்த வேலையில் புகுவதற்கு முன்னிருந்த உயர்ந்த பானத்தையெல்லாம் தங்கள் கண்ணில் காட்டாமல் நானே குடித்

துத் தீர்த்துவிட்டேன் என்று இந்தச் சொற்களை தன்னையும் அறியாமல் சொல்லிவிட்டு மயிர்சிலிர்த்து நடுநடுங்கின்றான். அதைப்பார்த்திருந்த மற்ற ஊழியக்காரர்களெல்லாம் தங்களுக்கும் அதேகதி நேரிடுமென்று பயந்து மனங்கலங்கி சிறுவன் மாந்திரிகன்; வேணுமென்றே ராஜ்ஜியத்தைக் கெடுக்க நேர்ந்திருக்கிறான்; மாயச்செய்கைகள் செய்யவொட்டாமல் பையனைத் தண்டித்தாலல்லாமல் தேசம் நாசமடையுமென்று அரசனிடத்தில் முறையிட்டார்கள்.

அரசன் மனதில் அப்படிப் படாமலிருந்தது பையனுக்கு நல்லகாலம். அரசன் அவனிடத்தில் அத்தியந்தம் நேசம் வைத்துவிட்டபடியால் அவர்களை வாய்மூடச் சொல்லிக் கட்டளையிட்டு, சிறுவனைப் பக்கத்தில் அழைத்து உன்னுடைய சரித்திரத்தை முற்றும் சொல்லென்று கேட்டான்; அவனும் தான் புத்தியறிந்தது முதல் அந்தத் தட்சணபரியந்தம் தனக்கு நேரிட்ட இன்பதுன்பங்களையெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்ல, அரசன் மிகவும் ஆச்சரியமடைந்து உன்னுடைய வீணையினால் எனக்கு வெகு நன்மைசெய்வாயென்று நம்புகிறேன்; ஆகையால் என்னிடத்திலிருக்க உனக்கு மனமுண்டாவென்று கேட்டான். அதற்குச் சிறுவன் பதில் ஒன்றுஞ்சொல்லாமல் வீணையை எடுத்து மீட்ட, அரசன் மறுபடியும் பேசத்தொடங்கி, பிள்ளாய்! நான் சொல்லுவது அவ்வளவும் உண்மையே; நீ என் பேச்சில் சந்தேகப்படவேண்டாம்; நான் சொன்னது பொய்யா மெய்யாவென்று பரிசோதித்ததற்காக எனக்கு உன்னிடத்தில் கோபமில்லை. ஸத்தியம் எப்போதும் நல்லது, யாவரும் அதைக் கைக்கொள்ளவேண்டியது. நீ என்னிடத்திலேயே இருக்கவேண்டுமென்பது என்னுடைய கருத்து; நீ என்னசொல்லுகிறாய் என்று கேட்கும்போது, ஸத்தியவான் அரசன்காலில் வீழ்ந்து மஹானுபாவன் என்றால் தங்களுக்கே தகும்; நான் தங்களிடத்தில் இருக்கும்படியானால் அதைவிட சந்தோஷமான காரியம் வேறில்லை; தெரியாமையால் நான் ஏதாவது செய்திருந்தால் மன்னிக்கவேண்டும் என்று வணக்கமாய்ப் பேசினான்.

வேட்டையினின்றும் திரும்பி நகரம்போய்ச் சேரவேண்டுமென்று நிச்சயித்து அரசன், கூடாரத்தைப் பெயர்த்துவிட்டுப் பிரயாணத்துக்குச் சித்தமாயிருக்கும்படி தன்னுடைய ஆட்களுக்குத் திட்டம்பண்ணி மறுநாள் அங்கிருந்து புறப்பட்டான். புறப்பட்ட மூன்றாம்நாள் தன்னுடைய சொந்த ஊருக்கு அருகே போகிறது கண்டு ஸத்தியவான் அவ்வூருக்குச் சென்று தான் உன்னதபதவி அடைந்த சங்கதியை அந்த ஊர் ஜனங்களுக்குத் தெரிவித்து நியாயாதிபதியும் குடியானவனும் தன்மேல் குற்றம்சாட்டினது அநியாயமென்று அவர்கள் வாயைக்கொண்டே ஊராருக்கு முன்னிலையில் சொல்லுவிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு, எஜமானாகிய அரசனிடஞ்சென்று தன்னுடைய ஊருக்குப் போய்வர செலவு கேட்க, அரசன் அதற்கு ஒத்துக்கொண்டதுமல்லாமல், சில வேலைக்காரர்களையும் அவனோடு கூட்டியனுப்புவித்தான். அவர்களோடுகூட சிறுவன் ஆடம்பரத்துடனே கிராமத்துக்குள் போவதைக் கண்டு ஜனங்கள் என்ன அதிர்ஷ்டம், என்ன அதிர்ஷ்டமென்று ஆச்சரியப்பட்டுக் கைதட்டிக் கூவினார்கள். அவன் அதை எவ்வளவும் லட்சியம்பண்ணாமல் நியாயவிசாரணை ஸ்தானத்துக்கு நேரே சென்றான். அப்போது அங்கே பேசிக்கொண்டிருந்த நியாயாதிபதியும் குடியானவனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து திகைத்துநின்றார்கள். சிறுவன் அவர்களை நெருங்கி அவர்கள் தன்மேல்

பழிபோட்டு தண்டனைக்கு உட்படுத்தினது அநியாயமென்று ஜனங்கள் முன்பாகச் சொல்லவேண்டுமென்று கேட்டான். நியாயாதிபதி கோபங்கொண்டு இந்தப் பயல் என்னசொல்லுகிறான் பார்! இவன் கொழுப்பு இவ்வளவா? இவ்வூரிலிருந்து ஓடிப்போனபோது காசுக்கு வழியில்லாதவனாயிருந்தான்; இப்போதோ முன்சேவகரும் பின்சேவகருமாயிருக்கிறான். இவன் பெருங்கொள்ளைக்காரன்; இவர்களோ உடன் குற்றவாளிகள் என்று இவ்வாறு தூஷித்துக்கொண்டிருக்கையில், மந்திரவீணையின் இராகத்தினால் மாறுபாட்டுக்கு ஆளாகி உடனே தன்னையே தான் மறுதலித்து ஐயையோ! இதென்ன! என் வாயிலிருந்து அடக்கக்கூடாத சொற்கள் வருகின்றனவே; என்னண்பர்களே! நான் இந்த சிறுவனைப்பற்றி சொன்னதை நம்பவேண்டாம்; அதெல்லாம் சுத்தப் பொய் என்று சொல்லும்போதே ஊரோரெல்லாரும் அதைக் கண்டு பிரமைகொண்டு நின்றார்கள்; அவர்களுடைய ஆச்சரியம் இன்னும் மிகும்படி நியாயாதிபதியும் குடியானவனும் ஒரு மூச்சாக இந்தப் பையனிடத்தில் ஒரு குற்றமுமில்லை; எங்களுடைய கள்ளத்தனத்தை வெளியிட்டதற்காக, நாங்கள் வேணுமென்று இவன்பேரில் வீண்பழி சுமத்தினோம்; இவ்வுலகத்தில் எங்களைவிடத் திருடர்களும் கொடியர்களும் இருக்கிறார்களென்று எண்ணவேண்டாம்; இந்தக் கிராமத்தில் நாங்கள் மோசம்செய்யாத மனிதன் ஒருவருமில்லை; பண ஆசைபிடித்து எவ்வித பாவத்தொழில்களையும் செய்யத் துணிந்திருக்கிறோம் என்று கூச்சலிட்டார்கள். ஸத்தியவான் அவ்வளவு போதும் என்று நினைத்து வீணையை நிறுத்திவிட்டு ஜனங்களைப்பார்த்து: இவ்விரண்டுபேரும் எத்தன்மையானவர்களென்று பார்த்தீர்களா? இவர்கள் உங்கள் விஷயத்தில் செய்யும் காரியமும் வெளியாயிற்றே; இனி இவர்களை உங்களிஷ்டமானபடி செய்யுங்கள்; அது எனக்கு அக்கறையில்லை. நான் செலவுபெற்றுக்கொண்டு போய்வருகிறேன் என்று சொல்லி அவர்களிடத்தில் விடை வாங்கிக்கொண்டு தன்னுடைய ஆட்களுடனே அரசனிடம் போகத் திரும்பினான்.

அரசன் தன்னுடைய நகரத்தைச்சேர்ந்து அரண்மனையில் மந்திரிமார்களோடும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களோடும் சபைகூடியிருக்கையில் ஸத்தியவந்தனும் அங்கேபோய்ச் சேர்ந்தான். அப்போது அவன் சொந்த ஊருக்குப்போய் வந்த சங்கதியை நன்றாய் விசாரிக்க அரசனுக்குச் சாவகாசமில்லாததனாலே எதிரே போனவுடனே தலையசக்கி உட்காரச்சொன்னான்; ஏனெனில், அரசன் தான் நகரத்தில் இல்லாதகாலத்தில் ராஜ்ஜியபாரம் நடந்துவந்த விஷயத்தைப்பற்றி மந்திரிகளோடு விசாரித்துக்கொண்டிருந்தான். பிரதான மந்திரி அரசனிடத்தில் விண்ணப்பஞ்செய்ததாவது: தேசம் முற்றும் க்ஷாமமாய்ப்போயிற்று; ஜனங்கள் தீர்வைமுதலானவைகளை செலுத்தமாட்டோமென்றார்கள்; செலவோ மேன்மேலும் அதிகமாயிற்று; ஆகையால் தங்கள் உபயோகத்துக்காகக் கொடுக்கக்கூடிய பணம் கொஞ்சமாயிருக்கிறது. இப்படி முக்கிய மந்திரி ராஜசமூகத்தில் விக்கியாபனம் பண்ணிக்கொண்டிருக்கும்போது ஸத்தியவான் வழக்கப்படி வீணையை மீட்டினான்; அது உண்மையை வெளியில் இழுத்துவிடும் சாதனமானதுபற்றி, அந்த மந்திரி தான் முன்சொன்னதற்கு மாறுபாடாய் மகாப்பிரபு! நானும் என தோழன்மாரும் சொல்லும் பேச்சைத் தாங்கள் நம்பலாகாது; தங்களுடைய குடிகள் யாதொரு ஆடங்கமுமில்லாமல் வரி செலுத்திவிடுகிறார்களென்பது தங்களுக்கு நன்றாய்த்

தெரிந்தவிஷயமே; அதில் அவர்கள் எதாவது முரட்டுத்தனம்பண்ணினும் ஒரு தம்பிடிகூடவிடாமல் அடித்துப் பிடுங்க எங்களுக்கு வழிதெரியும். உண்மையான விஷயம் என்னவெனில், வசூலாகும் பணத்தைத் தங்களிடத்தில் ஒப்புவிக்காமல் நாங்களே எடுத்துக்கொள்ளுகிறோம். அந்தப் பணத்தைக்கொண்டு வேண்டிய செலவுபண்ணி குசாலாயிருந்துகொண்டிருக்கிறோம்; அன்றியும் காலம் எப்படியிருக்குமோ என்னவோ தெரியாதே; ஒருவேளை எங்கள் திருட்டுத்தனம் வெளிப்பட்டு தங்கள் சேவகத்திலின்றும் தள்ளப்படுகிறபட்சத்தில், காற்றிலேவிட்ட பஞ்சைப்போல் பறவாமல் ஓரிடத்தில் வைத்துக்கொள்ளுவதற்காக அன்னியதேசங்களில் கொஞ்சம் கொஞ்சம் ஆஸ்தி சம்பாதித்திருக்கிறோம் என்று வாஸ்தவமான விஷயங்களைப் பயிரங்கப்படுத்திவிட்டு மூர்ச்சைபடைந்து உடனே கீழேவிழுந்துவிட்டான். அரசன் ஆற்ற கோபமுள்ளவனும் நீதிநெறியில்லாத கேவலமோசக்காரப் பாவியை தயாதாட்சிணியம் பாராமல் இழுத்துக்கொண்டுபோய் சிறையிலடைத்து உபத்திரவம் பண்ணுங்களென்று காவலாளிகளுக்கு ஆஞ்ஞாபித்தான்.

அப்புறம் அரசன் வைத்தியனாரைப் பக்கத்தில் அழைத்து நீயல்லவோ சமயத்துக்கு ஒத்தாசைபண்ணினாய் என்று சந்தோஷப்பட்டு, அவனை முத்தமிட்டுத் தழுவிக்கொண்டான்; அதைப்பார்த்து உத்தியோகஸ்தர்கள் அனைவரும் உள்மர்மம் தெரியாமல் யாரோ ஒரு சிறு பையன் அரசனைக் கைக்குள் போட்டுக்கொண்டிருக்கிறான்; இனி நாம் என்னசெய்யப்போகிறோம் என்று திகிலடைந்தார்கள். அன்று முதல் அவர்களுக்கு ஒருநாள் போகிறது ஒரு யுகமாயிருந்தது. வைத்தியவான் அரசனைவிட்டு ஒருக்ஷணமாகிலும் நீங்குகிறதில்லை; அரசன் இதரதேசத்து ராஜாக்களுடனாவது மந்திரிகளுடனாவது ஏகாந்தமாய்ப் பேசவேண்டியிருந்தாலும் வைத்தியவந்தன் மறைவாய் எங்கேயாவது உட்கார்ந்திருந்து சமயம்பார்த்து வீணையைத் தூக்கிக்கொள்ளுவான். இப்படி அவனுடைய மந்திரவீணையினால் அயல்தேசங்களுடைய ரகசியங்கள் வெளிப்பட்டுப்போயின; அநேக சமாதான உடன்படிக்கைகள் நிறைவேறாமற்போயின; அடிக்கடி நானாவித மனஸ்தாபங்களும் கிளம்பிக்கொண்டிருந்தன. அன்னியதேசத்துத் தூதர்கள் தங்களுடைய உட்கருத்துகள் சரியல்லவென்றும், சொந்தலாபத்தையே கருதுகிறவர்களென்றும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ராஜ்ஜியத்தில் கெடுகோளாய்ச் சேவித்துவந்த வேலைக்காரர்களில் அநேகம்பேர் தள்ளுண்டார்கள்; புதிதாய் யாராவது வேலையில் புகவேண்டுமானால், வைத்தியவானுடைய மந்திரவீணையின் சோதனைக்கு உட்பட்டபிறகுதான் நியமிக்கப்படவேண்டும். இப்படிச் சகல ஊழியக்காரர்களும் அவனுக்கு நடுநடுங்கி கருடனைக்கண்ட பாம்பைப்போல இருந்தபோதிலும் ஒருவன்மாத்திரம் அவன் கையில் அகப்படாமலிருந்தான். அவன் யார் எனில், அகடியக்காரன். அவனைவிடப் பொய்யன் இருந்ததுமில்லை, இனி இருக்கப்போகிறதுமில்லை; ஒருநாளும் மெய்பேசாமலிருப்பதே பெருமையாக நினைத்திருந்தான். அவன் வெகு தந்திரக்காரனுதலால் இரண்டாம் பேர் இருக்கும்போது வைத்தியவந்தன் அருகே வருகிறதேயில்லை; அண்டையில் ஒருவரும் இல்லாமல் வைத்தியவான் தனியாயிருந்தாலந்த அகடியக்காரன் அவனை அணுகி வைத்தியத்தை அவ்வளவு உறுதியாய்ப் பிடிக்கிறது மூடத்தனம்; அதனால் உனக்கு வெகு தொந்தரவுகள் நேரிடும்; அரசன் ஒருவன்தவிர, மற்றப்பேர் யாவ

ரும் உனக்குப் பகையாளியாவார்கள்; உன்ஞல் இனி காரியமில்லையென்று கண்டால் அரசனும் உன்னைத் தூரத்திவிடுவான். என்னைப்பார், நான் ஒருபோதும் மெய்பேசுகிறதில்லை; ஆகையால் எல்லாரும் என்னிடத்தில் வந்து என் சிநேகத்தைக் கோருகிருர்கள்; அவரவர்க்கு என்னென்ன விருப்பமோ என்னென்ன ஆனந்தமோ அதைமாத்திரந்தான் சொல்லவேண்டும்; வெறுப்பாயிருக்கிறதை சொல்லக்கூடாது; அதுவே என்னுடைய ஏற்பாடு. மேலும் எல்லாரும் நகைக்கும்படி பரிகாசப்பேச்சுகள் பேசுவேன். அதஞல் எல்லாரும் சந்தோஷப்பட்டு என்னை விருந்துக்கு அழைக்கிறதும் வேடிக்கை அனுபவிக்கவேண்டுகிறதுமாய் என்னை மிகவும் கண்ணியம்பண்ணுகிருர்கள். சந்நியாசியைப்போலத் தனித்திராமல் நீயும் என்னைப்போல இன்பமாய் வாழலாம்; சத்தியத்தைமாத்திரம் கைவிடு என்று இனியவார்த்தைகளைப் பேசி சிறுவனை வழிதப்பிநடக்கும்படி போதிப்பான். சிறுவன் அந்தப் போதனைகளுக்கு இணங்காமல் தனது மன உறுதியைக் காப்பாற்றிவந்தான்.

(இன்னும் வரும்.)

சிற்றிருப்புப்பாதை.

சிறு இருப்புப்பாதை போடும் வகை முதல்முதல் ஜர்மனிதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிலாந்தில் எலிஜபத் ராணியவர்கள் ஆண்டுவந்த காலத்தில் அவ்விடத்திற்கு ஜர்மனியிலிருந்து சில சுரங்கவேலைக்காரர் போஞர்கள்; அப்போது அவர்கள் அங்கே உலோகங்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு எளிதாகக் கொண்டுபோகலாமென்று இருப்புப்பாதை போடுவித்தார்கள். இருப்புக்கம்பியின்மேல் சக்கரங்கள் எளிதாக உருளுமாதலால் அந்த வழியாய் குதிரைகள் எவ்வளவு பளுவான சுமைகளையும் இலகுவாய் இழுக்குமென்று ஊகித்து அதைப் பரிசோதித்தவர் (Outram) ஔட்ராம் என்பவர். ஆகையாலேதான் அப்பாதைக்கும் (Outramways) ஔட்ராம்பாதை என்று பெயரிடப்பட்டது; நாளாவர்த்தியில் அந்தப்பெயர் முதற்குறைந்து (Tramway) ட்ராம்பாதை என்ருயிற்று. ஔட்ராம் என்பவர் இருப்புக் கம்பி இடும்முறை அடியில் கண்டபடி ஒருவாறு தெரியவருகிறது. ஆறு அடி அகலமுள்ளதாய்ப் பாதை வரைந்து அதன் அகலமுழுவதும் ஒரு மாதிரியாய்ச் சமஞன பள்ளம்வெட்டி அது எவ்வளவு நீளமோ அவ்வளவு நீளமும் குறுக்கே ஒன்றுக்கொன்று இரண்டு மூன்று அடி தூரம்விட்டு பருத்த மரத்துண்டுகள் வைக்கப்படுகின்றன. இவைகள் நடுவில் எப்படிக் கோணலாயிருந்தாலும் பாவாயில்லை; இரண்டு ஓரங்களில்மாத்திரம் சதுரமாயிருக்கவேண்டும். இப்படி வைக்கப்பட்ட மரத்துண்டின்பேரிலும் ஒரு அடி நீளமும், ஆறு ஏழு அங்குலம் அகலமும், ஐந்து அங்குலம் கனமுமுள்ள

சதுரமான இரண்டு சிறிய மரத்துண்டுகள் வைத்து ஆணிகள் அடித்து பிருவாய் முடுக்கப்படுகின்றன; இச்சிறிய சதுரத் துண்டுகள் ஒன்றுக்கொன்று நாலு அடி தூரத்திலிருக்கும். இப்படியே முற்றும் செய்தானபிறகு இருப்புக்கம்பிகள் அந்த மரத்துண்டுகளின்மேலே விடப்படும். இந்த இருப்புக்கம்பிகளின் நடுவில் இப்போது சென்னபட்டணத்துத் தெருவில் போட்டிருக்கும் கம்பிகளிலே போல பள்ளம் இருந்ததாய்க் காணப்படவில்லை; ஆதலால் சக்கரம் நழுவாமலிருக்கும்படி கம்பி தரைமட்டத்துக்கு மேலே சற்று உயரமாயிருந்திருக்குமென்று தோன்றுகிறது.

17-ம் நூற்றாண்டின் கடைசியில் இங்கிலாந்தில் வர்த்தகம் விருத்தி அடைந்தது; முக்கியமாய் நிலக்கரிவர்த்தகம் அப்போது நடந்ததுபோல் அதற்கு முன்பின் ஒருநாளும் நடந்ததில்லையென்று சொல்லலாம். கரியை மூட்டைமூட்டையாய் வண்டிகளில் ஏற்றி குதிரைகட்டி இருப்புப் பாதையின்பேரில் கொண்டுபோவார்கள்; வார்ப்பட இரும்பாகையால் கம்பி அடிக்கடி முறிந்துபோய்க் கொண்டிருந்தது. முப்பது வருஷம் இப்படித் தடுமாறி அவஸ்தைப்பட்டபிறகு வார்ப்படமில்லாமல் இரும்பினால் கம்பிசெய்து பளுவையும் ஒரே இடத்தில் தாக்கவொட்டாமல் நாலண்டையும் பரப்பிவைத்தால் கஷ்டம் நீங்குமென்று தெரிந்து அதுமுதல் அப்படியே செய்ய ஆரம்பித்தார்கள். ஒரே மூட்டையாய் அடைக்காமல் சிறு சிறு மூட்டைகளாகக் கட்டிவைத்தால் பாட்டை மூலை திரும்பும்போது சுளுவாயிருக்குமென்றும் அப்போதுதான் தெரிந்தது. நிலக்கரியைக் கொண்டுபோவதற்குமாத்திரமன்று; வேறுபல காரியங்களுக்கும் இருப்புப்பாதை உபயோகப்படுமென்று தோன்றி இங்கிலாந்தில் முதல்தடவையாக 1825-ம் வருஷத்தில் (Liverpool) லிவர்பூலுக்கும் (Manchester) மான்செஸ்டருக்கும் இருப்புப்பாதை போடப்பட்டது; அதுமுதல் அதனால் உண்டாகும் பலன் அவ்வளவு இவ்வளவு அல்ல. பிரயாணிவண்டிகள் ஒவ்வொன்றிலும் சுமார் 25-பேர் ஏறுவார்கள்; அப்படிப்பட்ட வண்டியை ஒரு குதிரை மணிக்குப் பத்துமைல் விழுக்காடு இழுத்துக் கொண்டுபோகும். வண்டிநிற்கும் இடத்தில் ஜனங்கள் இறங்குவதைப்பார்த்தால் பெரிய கூட்டம் கலைகிறாப்போலிருக்குமாம்.

முதலில் போட்டபாதை வெகு லாபம் எடுத்துக்கொடுத்தது கண்டு நாலைந்து வருஷத்துக்குள்ளே இங்கிலாந்தில் அநேகவிடங்களில் இருப்புப்பாதைபோட ஆரம்பித்தார்கள். அதைப்பார்த்து பிரான்சு ஜர்மனிமுதலிய இதரதேசங்களிலும் அநேகமாயுண்டாக்கத் தலைப்பட்டார்கள். இதற்குள்ளே நீராவியந்திரம் ஏற்பட்டு எங்கும் உபயோகத்திற்கு வந்துவிட்டபடியால் அதையே எல்லாரும் பிடித்துக்கொண்டார்கள். குதிரைபோட்டிழுப்பதென்பது சுத்தமாய் நின்றுபோயிற்று. ஆகிலும் அமெரிக்கா கண்டத்தார்

மாத்திரம் அதைக் கைவிடவில்லை. தூரயாத்திரைகளுக்கு நீராவி யந்திரம் ஏற்றதாயினும் பெரிய நகரங்களில் எப்போதும் ஜனங்கள் நடமாடிக்கொண்டிருப்பார்களாகையால் அப்படிப்பட்ட இடங்களில் அது உதவாதென்று சமீப தூரத்துக்குள் போக்குவரவுக்குக் குதிரைகட்டி இழுப்பதே நலமென்று அறிந்து அவர்கள் தங்களுடைய பெரிய நகரங்கள் பட்டணங்கள் எல்லாவற்றிலும் அப்படியே செய்துவந்தார்கள். நெடுநாள் கழித்து ஐரோப்பியரும் அவர்களுடைய வழியை அனுசரிக்க எத்தனித்தார்கள்.

குதிரைகள் சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டு வந்தபோதிலும், அது கஷ்டமான காரியமென்பதற்குச் சந்தேகமில்லை; அவைகளைக் காப்பாற்றுவதில் எவ்வளவு உபத்திரவமும் பணச் செலவும் நேரிடுகிறது. மேலே சொல்லியபடி பட்டணங்களில் நீராவி யந்திரம் உபயோகப்படாதாகையால் இதற்கு நல்ல உபாயம் என்[illegible] நெடுநாளாய் விசாரணையிலிருக்கிறது. சிலநாளைக்குமுன்னே லண்டன் நகரத்தில் இதைக்குறித்து ஒரு பரீட்சை செய்தார்கள். க[illegible]ாரத்தில் சுழல்யந்திரங்கள் இருக்கிறதுபோல, சக்காத்தோடு கெட்டியான சுழல்யந்திரங்கள் சேர்க்கப்பட்டிருந்தன; அந்த சுழல்களை முடுக்கினவுடனே வண்டி வெகுதூரம் ஓடிற்று. அ[illegible]கே சுழல்களை முடுக்கிக்கொள்வதற்காக சிறு சிறு நீராவி[illegible] வைத்திருக்கவேண்டுமாம். சக்காத்தோடு சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு யந்திரத்தினால் எங்கேவேண்டுமானாலும் அங்கே வண்டியை நிறுத்திப்போடலாம். இது ஏறக்குறைய நல்ல யுக்தியாமென்று தோன்றுகிறது.

தெருக்களில் இருப்புக்கம்பி போடுவதைப்பற்றியும் அநேகர் வெவ்வேறு விதமாய் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்போது புதிதாய்ச் சென்னபட்டணத்தில் நிர்மித்திருக்கிறதுபோலத்தான் அநேகவிடங்களிலிருக்கிறது. குறுக்கேபோனாலும் நெடுக்கேபோனாலும் சாதாரண வண்டிகளுக்குச் சேதம் நேரிடாதபடிக்குக் கம்பிகளைத் தெருவோடே தெருவாய் அமைத்திருக்கிறது. கம்பியின்மேல் போக வண்டிய வண்டிகளுடைய சக்கரங்கள் அதைவிட்டு விலகாமல் [illegible]தன்மேலேயே செல்லும்படியாக அதன் நடுவில் ஏறக்குறைய ஒரு அங்குலம் அகலம் பள்ளம்பண்ணியிருக்கிறது; அந்தப் பள்ளத்திலே சக்கரங்கள் எளிதாய் உருளும். இப்படிச் செய்வதனால் [illegible] வண்டிகளுக்கு யாதொரு குந்தகமும் இல்லாததுமன்றி [illegible]ாபம் உண்டென்றும் சொல்லலாம். எப்படியெனில், அ[illegible] வண்டிகள் கம்பியின்மேல் ஏறும்படி நேரிடுவதனால் அவைகளுக்கு அதிக வேகம் உண்டாகின்றது.

அமெரிக்கர் விசேஷமாய் அனுசரிக்கிறது இந்த உபாயமல்ல; அவர்கள் செய்யும் மாதிரியும் நல்லதென்றே நினைக்கலாம். அதென்னவெனில், கீழே மரத்துண்டுகள் படுத்தி அதன்மேல் எட்டு அங்

குலம் அகலமும் அரை அங்குலம் பருமனுமுள்ள இருப்புத்தகடுகள் அடிக்கிறார்கள். இந்தத் தகடுகளின் இரண்டு வெளிப்புறத்து ஓரங்களிலும் ஒரு அங்குலம் உயரமும் ஒன்றரை அங்குலம் அகலமும் உள்ள ஒரு கம்பி போட்டிருக்கிறது. அதன் உபயோகம் என்னவென்றால் சட்டங்களினின்று வண்டியின் சக்கரம் ஒதுங்காமலிருக்கும். இந்தக் கம்பியின்மட்டம் தெருமட்டத்துக்குச் சரியாயிருக்கும்படி செய்திருக்கிறது; ஆகையால் தெருவண்டிகள் அபாயமில்லாமல் இஷ்டமானபடி போகலாம்.

இவ்விரண்டுந்தவிர இன்னொரு வகையுமுண்டு; அதை ஜர்மனி தேசத்தில் சிலர் கைக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போடுகிற கம்பி தெருவின் மட்டத்துக்குமேல் ஒரு அங்குலத்துக்கு அதிகமாய் உயர்ந்திருக்கும். இப்படி இருப்பதனால் அதற்குக் குறுக்கே செல்லுகிற வண்டிகள் ஒன்றாகிலும் சேதப்படாமலிருக்கிறதில்லை; அநேகவண்டிகளுக்கு இரிசு ஒடிந்துபோகிறதுண்டு. ஜர்மனிதேசத்தில் ஒரு பட்டணத்தில் இம்மாதிரி போட்டிருந்த கம்பியை எடுத்துவிட்டு தரைமட்டமாய்ப் போடும்படி நேரிட்டது. கம்பிபோட்டு வண்டிவிடுவது அநேகருக்கு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப்போகச் சௌக்கியமாயிருந்தபோதிலும் ஜனங்கள் அடர்ந்த பெரியபட்டணங்களில் அது இடையூறுகளை விளைவிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் நகரங்களின் சௌக்கிய முதலியவற்றைப் பாதுகாத்துவரும் விசாரணைச் சபையார் தெருவுகளில் கம்பிபோட உத்தரவுகொடுக்கிறதற்குமுன்னே அதனால் உண்டாகும் லாபநஷ்டங்களை நிதானமாய்ச் சீர்தூக்கிப்பார்த்து எப்படி உசிதமாகக் காண்கிறதோ அப்படிச் செய்யவேண்டுமேயல்லாமல் வீதியிருப்புப்பாதைச் சங்கத்தாருடைய இஷ்டப்படி விட்டுவிடுவது யுக்தமன்று.

தசகுமார சரிதம்.

முதலாவது:

குமாரர்கள் அவதரித்தல்.

(தொடர்ச்சி.)

ஒருநாள் ராஜசபையில் மந்திரி முதலானவர்களோடு ராஜா விநோதமாயிருக்கையில் சன்னியாசியொருவன் வந்தான். அரசன் அவனைக்கண்டு, பிறநாட்டுச் செய்தியைத் தெரிந்துகொண்டு வரும்படி மாறுவேஷம் பூண்டுபோயிருந்த சாரனென்று தெரிந்து, உடனே அங்கிருந்த மந்திரிமார்கள்தவிர மற்றவர்களையெல்லாம்

விடைகொடுத்தனுப்பிப் புன்னகைப்போடு, ஓ தவசியே! நீ கபட வடிவத்தோடு சீமையெங்கும் சுற்றினையே, எங்கெங்கே என்னென்ன விசேஷங்கள் என்று கேட்டான். கேட்கவே, அவன் இருகையும் கூப்பித் தலைமேல் வைத்துக்கொண்டு விண்ணப்பஞ்செய்யத்தொடங்கினான். ஓ மகாப்பிரபுவே! நான் தாங்கள் கட்டளையிட்டபடி சத்துருராஜாக்களின் சமாசாரத்தை அறிந்துகொண்டு வரும்படி புறப்பட்டேன்; அதற்கு உண்மையான வேஷத்தோடு போனால் உபயோகமில்லையென்று தெரிந்து சன்னியாசியாய்ப் பாவித்துக்கொண்டு எங்கும் திரிந்துபார்த்துக் கடைசியில் மாளவதேசம் வந்து, அத்தேசத்தரசனுடைய வரலாற்றை விசாரித்தேன். மகாதுரீகங்காரியான மானஸாரன், முன் நமக்கும் அவனுக்கும் நேர்ந்த யுத்தத்தில் தன்னுடைய அளவற்ற சேனை அழிந்ததும், தான் மானபங்கப்பட்டதும் நினைத்து நினைத்து மனமுருகி, எவ்விதத்திலாவது தங்களை வெல்லவேண்டுமென்று ஆக்கிரகங்கொண்டு, மகாகாலமென்கிற க்ஷேத்திரத்தில் இராநின்ற பரமேசுவரனைக்குறித்துத் தவஞ்செய்தான். அவனுடைய பூசையால் அவர் சந்துஷ்டராகிப் பூமியெங்கும் எரிக்கும்படியான ஒரு கதையைத் தந்தருளினார். அவன் அதைப் பெற்றுக்கொண்டு தனக்கு எவ்விடத்திலும் எதிரியேயில்லையென்று கர்வமடைந்து தங்கள்மேல் படையெடுத்திருக்கிறான். மேலே நடக்கவேண்டுவதெல்லாம் பிரபுக்களே தெரிந்துகொள்ளலாம் என்றான். மந்திரிமார்கள் அதைக் கேட்டு ராஜஸமுகத்தில் ஓரறிக்கைசெய்தார்கள். ராஜாதிராஜனே! மானஸாரன் தான் துர்ப்பலனாயிருந்தபோதிலும் முக்கியமாய்த் தெய்வசகாயத்தைக்கொண்டே இப்போது யுத்தசன்னத்தனாயிருக்கிறான். அவனை எதிர்க்க நமக்கு இது தருணமன்று.

> 'வினைவலியுந் தன்வலியு மாற்றான்வலியுந்
> துணைவலியுந் தூக்கிச்செயல்'

என்னும் பெரியோர்சொல்லைக் கேட்டதில்லையா? ஆதலால் எங்கேயாவது போய் ஒளித்துக்கொள்வதே நலம் என்று யாவரும் பலவாறு வேண்டிக்கொண்டார்கள். அவையெல்லாம் செவிடன்காதில் சங்கூதினதுபோலாயின. ராஜஹம்ஸன் ஜயித்தால் ராஜ்யம்; மரித்தால் வீரச்சொர்க்கம்; அதுவேதவிர, பகைவற்குப் பின்வாங்குகிறதாவென்று ஒரேபிடிவாதம் பிடித்தான்.

மாளவராஜன், நமக்குப் பரமேசுவரனுடைய வரப்பிரஸாதத்தால் கிடைத்த கதையொன்றுமே விரோதிகளை வெல்லப்போதுமென்று தைரியத்துடன் சண்டைக்குக் கொடிதூக்கினான். அச்செய்திகேட்டு மகதராஜன் மந்திரிகள், இவன் பிடித்தது பிடிவாதந்தான். நாம் சொல்லுவதில் பயனில்லை. தேவிமார்களையாவது வேறிடத்திற்கொண்டு விட்டுவைப்போமென்று ஆலோசித்து அர

சனை அனுமதிகேட்டார்கள். அதற்குமாத்திரம் அவன் இசையவே மூலபலத்தை அவர்களுக்குக் காவலாக்கி, அவர்களைப் பகைவர்களுக்குத் தெரியாத விந்தியமலைச்சாரலில் கொண்டுசேர்த்தார்கள். மகததேசாதிபதியானவன், மாளவராஜன் மட்டுமிதமில்லாத சேனையோடு தன்னுட்டெல்லையைக் கடந்துவந்தானென்றது கேட்டு, உடனே தானும் அளவற்ற நால்வகைச்சேனைகளோடு அப்பகைவனைத் தகைந்தான். தகையவே, பெரும்போருண்டாகி இரண்டு ராஜாக்களும் வெகுகாலம் தோற்பு ஜயிப்பு தெரியாமல் சமபலமாய்ப் பற்பல பாணங்களைப் பிரயோகித்து தேவதைகளும் மனிதர்களும் பார்த்து அதிசயப்படும்படி சண்டைசெய்தார்கள். அப்போது மானஸாரன், இவன் எந்நேரமானாலும் நமக்குச் சளைக்கிறவனன்று, இவ்விதமாயிருந்தால் நாம் ஒருபோதும் ஜயம்பெறமாட்டோமென்று மஹேசுவரர் கொடுத்த கதாயுதத்தை அவன்மேல் எறிந்தான். ராஜஹம்ஸன் அது தன்மேல் விழவொட்டாமல் பலபாணங்களைச் சரமாரியாய்ப் பொழிந்து அதைத் தடுக்க முயன்றும், தேவாஞ்ஞை வீண்போகாதாகையால் அந்தக் கதை அவையெல்லாவற்றையும் மீறிக்கொண்டு ஓடிவந்து சாரதியைச் சங்கரித்து முதலாளியையும் மூர்ச்சித்தது. அப்போது அந்தத் தேர்க்குதிரைகள் ஓட்டுவோனில்லாமையால் அதது தனக்குத் தோன்றியபடி எங்கேயோ ஓடப்போய் அவனுடைய பாக்கியவிசேஷத்தால் அந்தப்புரத்துத் தேவிமார்கள் இறங்கியிருந்த விந்தியமலைத் தாழ்வரையில் ரதத்தைக்கொண்டு சேர்த்தன. உடனே மாளவராஜன் ஜயபேரியடித்துச் சங்கத்துவானம்பண்ணி மகததேசத்தைக் கைக்கொண்டு புஷ்பபுரத்திலேயே தான் அரசுசெலுத்திக்கொண்டிருந்தான். ரணகளத்தில் விழுந்து மூர்ச்சித்துப்போன மந்திரிமார்கள் கொஞ்சநேரங்கழித்து இளங்காற்றுமுதலியவைகளால் களைதெளிந்து முழுதுந்தேடியும் அங்கெங்கும் அரசனைக் காணமல் விசனமுற்று மனங்கலங்கி தேவிகளிடம் வந்து சேர்ந்தார்கள்.

ராஜமஹிஷி அளவற்ற சேனையழிந்ததும், கடைசியில் தன் புருஷன் போனவிடம்தெரியாமல் போய்விட்டதும் கேள்விப்பட்டு நாம் பிறந்ததென்ன, வளர்ந்ததென்ன? நமக்கு இக்கதியானேர்ந்ததென்று துக்கக்கடலிலாழ்ந்து தன் புருஷன்போனவழி தானும் போம்படித் தீர்மானித்தாள். அது தெரிந்து மந்திரிமார்கள்: அம்மா! நம்மரசன் எங்கேயோ ஜீவனோடுதான் இருக்கிறார். சிலதினத்தில் தானேவந்து சேரப்போகிறார். மேலும் உம்முடைய கர்ப்பத்தில் அதிசூரனான ஓர் இளஞ்சிங்கம் பிறக்கப்போகிறது என்று ஜோதிஷசாஸ்திரி ஒருவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் இப்போது நீர் துணிந்தது சரியல்லவென்று சாஸமாய்ச் சமாதானம் பண்ணினார்கள். அத்தேவியாரோ இவைகளொன்றையும் கேளாமல் நம் பிராணநாதன் போனபின்பு நாம் இப்பூமியிலும் நாடுகிறதா

வென்று கருத்துக்கொண்டு அவர்களுக்கு உத்தரமொன்றும் சொல்லாமல் சும்மாயிருந்து நல்லநிசிவேளையில் அங்கிருந்த காவலாளர் முதலிய யாவரும் தேகஸ்மரணை தெரியாமல் உறங்கிப்போகக்கண்டு, இதுதான் நல்லதருணமென்று எழுந்திருந்து கொஞ்சதூரம் போய் அங்கிருந்த ஓராலமரத்தின்கீழ் அம்மரக்கிளையில் துணியை மாட்டித் தன்கழுத்தில் சுருக்கிட்டுத் துர்மரணமாய்ப் பிராணனைவிடத் தீர்மானித்துத் தன்னுடைய தீங்குரலால் கூவிப் புலம்பப் புறப்பட்டாள். முன் யுத்தபூமியினின்றும் ஓடிவந்த ராஜஹம்ஸனுடைய தேர்க்குதிரைகளும் அம்மரத்தினருகே வந்துநின்றன. அத்தேரின்மேல் களைத்து விழுந்துகிடந்த அரசனுக்கு வரவர களைநீங்கி அப்போதான் கொஞ்சம் பிரஞ்ஞைவந்தது. அத்தருணத்தில் அவன் இந்த அழுகைக் கூச்சலைக்கேட்டுத் தன் மனையாட்டிதானென்று நிதானித்து மெல்லமெல்ல இனியவார்த்தைகள்சொல்லி அவளைக் கிட்டவா வேண்டினன். அதைக் கேட்ட ராணியானவள் இவன் நம் உயிர்த்தோழன்தான் என்று ஆனந்தபூரிதையாய் உடம்புதெரியாமலோடிவந்து அவனைக் கண்டபோது மேகத்தைக் கண்ட மயில்போலக் கொந்தளித்து, மலர்ந்தகண் மூடாமலே அவனைத் தழுவிமுத்தமிட்டுப் பக்கத்தில் நித்திரைசெய்துகொண்டிருந்த சேனுதிபதிகளைச் சீக்கிரமாய் ஓடிவரும்படிக் கூவியழைத்தாள். அவர்கள் அந்தக் கூச்சலைக்கேட்டு இதென்னவோ விசேஷமென்றோடிவந்து பார்க்கையில், தேரின்மேல் மூர்ச்சைதெளிந்து கொஞ்சம் பிரஞ்ஞைவந்து படுத்திருந்த அரசனைக்கண்டார்கள். அவன் மேல் ஊசிநாட்ட இடமில்லாமல் பாணம் பொத்திக்கிடந்தது. அவனைக்கண்டு அம்மந்திரிகள்: மகாப்பிரபுவே! அந்த மகாபாதகனுல் சாரதி கொலையுண்டுபோகவே தேர்க்குதிரைகள் நடத்துவானில்லாமல் நமது நற்றவத்தால் வேறெங்கும் போகாமல் இவ்விடம்வந்து சேர்ந்தனவென்று உபசாரமாய்த் தேற்றினார்கள். அதற்கு ராஜா ஆமாம், தேரோட்டியையமாத்திரமேயல்ல, என்னையும் தெய்வகடாக்ஷத்தால் கிடைத்த கதையால் புடைத்தான். இதுவரையில் ஞாபகமேயில்லாமல் கிடந்தேன்; இப்போதுதான் குளிர்ந்து நிலவோடு கூட மந்தமாருதம் வீசவே கொஞ்சம் சப்பிராணித்தேன் என்றான். அதுகேட்டு யாவரும் அவன் பிராணனோடு வந்துசேர்ந்ததையே பெரிதாய்நினைத்து அரசனை முன்னிட்டுக்கொண்டு கூடாரத்தண்டைபோய் நாளளவில் அவன் தேகத்திலிருந்த காயங்களை ஆற்றினார்கள்.

ராஜஹம்ஸ மகாராஜன் நமக்கு என்ன அவமானம் நேர்ந்தது பார்த்தையா? இப்போது நாம் என்ன வெட்கங்கெட்ட பிழைப்பு பிழைக்கிறோம் என்று, ஒருவர் மூஞ்சியிலும் விழிக்கவேண்டியிராமல் உள்ளேயே வெட்கி மனங்குமுங்கிக்கொண்டிருந்தான். அவன் படுகிற துன்பந்தெரிந்து அவனுடைய மனையாட்டி மந்திரிமுதலிய

சிநேகிதர்கள் எல்லாரும் வந்து, ஓ நாதனே! உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை; அப்படியிருக்க, எல்லாந்தெரிந்தவர்களும் ஒன்று மறியாதவர்போல இப்படி மனங்கலங்கலாமா; அதிர்ஷ்டமும் ஐஸ்வரியமும் ஒருவர்பங்கா? முன்னாளில் புருஷோத்தமனான சக்கரவர்த்தித் திருமகன் ராஜ்யத்தைத் துறந்து தண்டகாவனத்திற்குச் சென்று பிராட்டியைப் பறிகொடுத்து எப்பாடுபட்டார்; அப்படியே அரிச்சந்திரன், நளச்சக்கரவர்த்தி, பஞ்சபாண்டவர்கள்முதலான மகாராஜாக்கள் மனதினாலும் நினைக்கக்கூடாத சங்கடங்கள் அனுபவித்துப் பின்பு சுகப்பட்டது கேட்டதில்லையோ? விதி யாரை விட்டது; யாவரும் தெய்வத்தின்கீழ்க் குடிதானே; ஜன்மாந்தரத்தில் அவரவர்செய்த பாபபுண்ணியங்கள் அனுபவித்தாலொழியத் தீருமோ; அதிர்ஷ்டம் ஒருவர்பங்கன்று. 'பொன்னிலையு மின்னிலையும் ஒருவாறிருக்கும்' என்கிற பெரியோர் பேச்சு பொய்த்துப் போகுமா? நாமும் கொஞ்சநாளில் தெய்வகடாக்ஷம்பெற்றுச் சுகமாய் வாழ்வோம் என்று அவன் மனக்கவலை நீங்கப் பற்பல கதை சொன்னார்கள். அவனும் அப்படியே அவர் சொன்னதை அங்கீகரித்துக் கொஞ்சம் தைரியமடைந்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமென்று அங்கே எழுந்தருளியிருந்த வாமதேவர் என்கிற ஒரு ரிஷியின் ஆச்சிரமத்திற்குப் போய் அம்முனிவரைக்கண்டு வணங்கி, அவரனுமதியால் அவருடைய பர்ணசாலையின் பக்கத்தில் தானும் கூடாரம் அடித்துக்கொண்டு அதில் சுகமாய் வாசம்பண்ணிக்கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்.)

பற்கள்.

சாப்பிடுகிற பதார்த்தங்களைத் துண்டிக்கவும், கிழிக்கவும், அரைக்கவும் வேண்டியதாய் இருக்கிறபடியால், அதற்குத் தகுந்த பிரகாரம் பற்கள் மூன்றுவிதமாய்ப் படைக்கப்பட்டிருக்கின்றன. அதனதன் தொழிலுக்குத்தக்கதாய் உருவாக்கப்பட்டு உசிதமான பிரமாணமுமுள்ளதாயிருக்கின்றது. 32 பற்கள் உண்டு; இவைகளில் மேல்தாடையில் 16ம், கீழ்த்தாடையில் 16மாய் இருக்கும்.

பற்கள் நான்குவிதப்படும்.

முதல்: முன்பற்கள் 8; மேல்தாடையில் 4-ம், கீழ்த்தாடையில் 4-மாய் இருக்கும். இந்தப் பற்களால் பதார்த்தங்களைக் கடித்துத் துண்டிக்கிறோம்.

பிறகு: நாய்ப்பற்கள் 4; இவைகள் முனையாய் இருக்கும். தாடையின் பக்கத்துக்கொன்றுண்டு. கடித்துத் துண்டிக்கக்கூடாத

மாமிசம்முதலிய வலியபதார்த்தங்களைக் கிழிக்கிறதற்கு இவைகள் உபயோகப்படுகின்றன. இறைச்சி தின்கிற நாய்க்கு அநேக பற்கள் முனையாய் இருக்கிறபடியால், நாய்ப்பற்கள் எனப் பேரிடப்பட்டன.

இவைகளுக்குப்பின். சிறியகடைவாய்ப்பற்கள் 8 உண்டு; இவைகள் கடிக்கவும் மெல்லவும் இரண்டுக்கும் உபயோகப்படும். தாடையின் பக்கத்துக்கு இரண்டாக இருக்கும்.

இவைகளுக்குப்பின் இருக்கிற உறுதிப்பற்கள், பெரிய கடைவாய்ப்பற்கள் என்று சொல்லப்படும். அவைகள் 12; தாடையின் பக்கத்துக்கு 3 ஆகவிருக்கும். இந்தப் பற்கள் பெருத்து இவைகளின் பலத்த வேருகள் அதிகரித்து தாடை எலும்புகளில் உறுதியாய்ப் புதைந்து மேல்புறம் மேடுபள்ளமாக இருக்கிறபடியால், வன்மையுள்ள பதார்த்தங்களை உடைக்கத் தகுதியானவைகளாக இருக்கின்றன. மேல்புறம் சமனாய் இராமல் மேடுபள்ளமாக இருப்பதால் பதார்த்தங்கள் நன்றாக மசியும்.



1, 2. முன்பற்கள்.
3. நாய்ப்பல்.
4, 5. சிறிய கடைவாய்ப்பற்கள்.
6, 7, 8. பெரிய கடைவாய்ப்பற்கள்.

மேல்பற்களும் கீழ்ப்பற்களும் ஒன்றோடொன்று பொருந்தும்படி செய்திருக்கிற தன்மையே ஆச்சரியம்! இவ்விதமாக ஏற்பட்டிருப்பதினால்தான் பதார்த்தங்கள் பற்கள்மத்தியிலிருந்து செவ்வையாக அரைக்கப்படுகின்றன.

எலும்பைப்பார்க்கிலும் பற்கள் உறுதி. ஒன்றோடொன்று உராய்வதில் தேய்ந்துபோகாமல் இருக்கும்படி ஈறுகளுக்கு மேற்புறமாய் இருக்கிற பற்களின் சிகரங்கள் உறுதியாய் மழமழவென்று இருக்கும்; அதற்குப் பல்பரளை என்று பேர்.

பற்களின் பரளைக்கு உணர்ச்சியில்லை, ஆனால் பற்களுக்கு உணர்ச்சியுண்டு. அந்த இடத்தைப் பல்பரளை மூடிக்கொண்டிராவிட்டால் மெல்லும்போதெல்லாம் நமக்கு நோவுகாணும்.

சிறுவர்கள் பழங்களிலுள்ள கொட்டைமுதலிய கடினபதார்த்தங்களை அஜாக்கிரதையாகப் பற்களால் கடிப்பதினால் அவர்களுக்குத் தெரியாமல் பல்பரளை தெறித்துப்போகும்; பிறகு காற்று அதின்வழியாய்ப் பற்குள் பிரவேசித்து, பல் சொத்தையாகி, பல் வலியுண்டாகும்.

பல்பரளையைச் சுத்தியாக வைக்காவிட்டால் அதற்குக் கெடுதி சம்பவிக்கும். சாப்பிடுகிற பதார்த்தங்களின் துண்டுகள் ஏதாவது பற்சந்துகளில் சிக்கிக்கொண்டிருந்தால் அவைகள் அழுகி, இரும்பை துருமென்றுவிடுவதுபோல் பல்பரளையை மென்றுவிடும். பல்பரளை போய்விட்டால் சீக்கிரத்தில் சொத்தையாகிச் சகிக்கக் கூடாத பல்வலிகாணும். பற்களை இழந்துபோகும்படியாயும் சம்பவிக்கும்.

உன்னிடத்தில் நல்ல கத்தி அல்லது கத்தரியொன்றைக் கொடுத்துவைத்தால், அதை உபயோகித்தபிறகுத் துடைத்துச் சுத்தி செய்யாமல் வைப்பது மூடத்தனமென்று உன் புத்தியில் தோற்ற மாட்டாதா? நமது சவுக்கியத்துக்கும் சுகத்துக்கும் உபயோகிக்கும் படியாகக் கொடுத்திருக்கிற பற்களை, துலக்கிக் கழுவிச் சுத்தியாய் வைக்காவிடில் அதைவிட அதிக மூடத்தன்மையல்லவா? இரும்பு ஆயுதங்களை உபயோகித்தபிறகு, செவ்வையாகத் துலக்கிவைக்க வேண்டியதென்று நமக்குத் தெரிந்திருக்கிறது. அப்படி வைக்காமலிருப்பதினால் உண்டாகிற கெடுதியைப்பார்க்கிலும் வாய்க்குள்ளிருக்கிற பற்களை அசுத்தமாய் வைப்பது அதிக கேடு.

இராத்திரி நித்திரைக்குப் போகிறதற்குமுன் பற்குச்சினால் துலக்கி, வாயைச் செவ்வையாக அலம்பிவிட்டுப் படுத்துக்கொள்ள வேண்டியது; மறுபடியும் காலையில் எழுந்தபிறகு அவ்விதமாகவே செய்துகொள்ளவேண்டியது. இரவில்செய்ய அநுகூலப்படாதபோதிலும், காலையில் தினந்தோறும் தந்தசுத்தி செய்யவேண்டியது. ஊத்தைப்பற்களைப்பார்த்து அசங்கியப்படுவதைவிட மேலான அசங்கியம் ஒன்றுமில்லை. இதுவுமன்றியில் வாய் நாற்றம்பிறக்கும். பலகாரம், மிட்டாய், பச்சைக்காய்கள்முதலான சுகத்தைக் கெடுக்கிற பதார்த்தங்களைச் சிறுவர்கள் தின்று பற்களைக் கெ

டுத்துக்கொள்ளுகிறார்கள். இவ்விதப் பண்டங்கள் அதிகமாய்ச் சாப்பிட்டால் வயிறு கெடும்; அதனால் பற்களுக்கும் கெடுதியுண்டாகும்.

பலவியாதியினால் அநேக ஜனங்கள் உபத்திரவப்படுகிறார்கள். சிறுவயதில் தங்கள் பற்களைப் பத்திரப்படுத்திக்கொள்ளாமல் போவதினால் உண்ணுகிற உணவுகளை மெல்லத் தகுதியான தந்தங்கள் அற்று ஆயுள்வரையில் வியாதியில் மூழ்கியிருப்பார்கள்.

பற்களெல்லாம் ஒரேகாலத்தில் முளைக்கிறதில்லை; வயதுவந்த பிறகுதான் 32 பற்களும் முளைத்துப் பூர்த்தியாகும். குழந்தை பிறக்கும்போது பற்களிராது; ஏனெனில் அதனுடைய ஆகாரத்துக்கு மிருதுவான ஈறுகள் போதுமானது; கடினப்பற்களிருந்தால் உபத்திரவம் சம்பவிக்கும். குழந்தை சாதம் உண்ணும்படியான பருவபக்குவத்துக்கு வந்தபோது, சிறியபற்கள் ஈறைவிட்டு வெளிப்படும். உண்ணும் உணவு வித்தியாசப்படுவதற்குத் தகுந்தபடி மெல்ல பற்களும் பெருத்து உறுதியாகும். பால்வியவயது சென்றபிறகு முதல் முளைத்த சிறியபற்கள் விழுந்துவிடும்; அவைகளுக்குப் பதில் கெட்டிப்பற்கள் முளைத்து ஜீவிதகாலம்வரையிலிருக்கும்.

மனிதனுக்கும் பாலகனுக்கும் சவுக்கியத்துக்குத்தகுந்தபடி சர்வாக்ஷகர் ஏற்படுத்தியிருக்கிற அநேகவிஷயங்களில் போஜனபதார்த்தங்களுக்கு ஏற்றபடி அமைத்திருக்கிற பற்களால் அவருடைய ஜாக்கிரதை இன்னதென்று நமக்குத் தெரியவருகிறது. சவுக்கியத்துக்காக அவர் நமக்குக் கொடுத்திருக்கிற பொருள்களைக் கிரமமாக உபயோகப்படுத்தாததினால் காணுகிற வேதனை நமது தப்பிதத்தைச் சுட்டிக்காட்டும் முன் எச்சரிக்கையாக இருக்கின்றது.

மனிதர்விஷயத்தில் செய்திருப்பதுபோல் இதரஜீவஜந்துக்களிலும் இவ்வித ஏற்பாடு உண்டாக்கியிருப்பதைக் காணலாம். எவ்விதமெனில், மாமிசம் பக்ஷிக்கிற நாய், பூனை, புலி, சிங்கம்முதலிய மிருகங்களில் கோரைப்பற்களும் கடைவாய்ப்பற்களும் மெத்தப் பெருத்துக் கெட்டியாய் இருக்கும். புல்மேய்கிற குதிரை பசு முதலியவைகளில் முன்பற்களும் கடைவாய்ப்பற்களும் விசேஷித்திருக்கும். கடித்துத் தின்கிற எலி முயல் முதலிய ஜந்துக்களுக்கு நீண்ட முன்பற்களும் கடைவாய்ப்பற்களும்மாத்திரமிருக்கும். சர்வத்தையும் பக்ஷிக்கிற மனிதனுக்கு மிருகங்களுக்கிருக்கிறவைகளைப்பார்க்கிலும் பற்கள் வெவ்வேறுவிதமாக ஏற்பட்டிருக்கின்றன.

சமாசாரம்.

பட்டமிழந்த காய்க்துவார்.—காய்க்குவார் மல்லாராவ்விஷயத்தில் செய்யப்படும் தீர்ப்பு நாம் முன் நினைத்தவாறே பட்டமிழந்துவிடும்படி முடிந்தது. இந்தப் பிரபு நாளதுமீ 2வ காயிற்றுக்கிழமை பின்மாலை 4 மணிக்குச் சென்னை மத்தியஸ்தானத்தில் இருப்புப்பாதை வழியாய்வந்து சேர்ந்தார். அவருக்குக் காவலாக ஐரோப்பா சேவகரும், தளகர்த்தாக்கள் இருவரும், அவருக்கு உதவியாய் டாக்டர் ஸ்யுஅர்ட் என்பவரும் கூடவந்தார்கள். கவர்னர்ஜெனரலவர்கள் தீர்மானித்தது பம்பாய்–சென்னைக் கவர்னர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவுங்கூடும். உலகத்திற்குத் தெரியாது. மல்லாராவ் கவர்னர்ஜெனரலுடைய தீர்ப்பைப் பெற்றதும், பரோதாநகரத்தைவிட்டுப் புறப்பட்டதும், சென்னையில் வந்ததும் ஆகிய காரியங்கள் நடந்த தீவரத்தையும் ரகசியமான ஏற்பாட்டையும் யோசித்து யாவரும் அதிசயிப்பார்கள்.

கவர்னரவர்கள் மரணம்.—மாட்சிமைதங்கிய நம்முடைய கவர்னராகிய ஹாபர்ட் பிரபு சென்ற செவ்வாய்க்கிழமைச் சாயங்காலம் ஆறேமுக்கால் மணிக்குக் காலஞ்சென்றுவிட்டார். 20வ முதற்கொண்டு அவர் வருத்தமடைந்திருந்தும், இப்படிப்பட்ட பயங்கரமான ஆபத்து அவ்வளவு சமீபமாய் நேரிடும் என்கிற எண்ணம் அவரோடிருந்த அன்பரும் கொள்ளவில்லை. சிலநாள் அவருடன் இருந்த டாக்டர் டரேட் என்னும் வைத்திய துரை 27வ லண்டனுக்குத் திரும்பிப்போகக் கப்பலில் ஏறும்படி இருந்தார். செவ்வாய்க்கிழமை பின்னேரம் கவர்னரவர்களுக்கு உண்டான வியாதியின் குணம் மாறினபடியினாலே, மேற்படி துரை தாம் நினைத்தபடி கப்பல் ஏறாமல் நின்றுவிட்டார். ஜுரமும் வயிற்றுளைவும் அவர் மரணத்திற்கு ஏது. எப்பிரல்மீ 19வ ராஜதானி வித்தியாசாலை வருஷோச்சவம் நடந்தபொழுது, அவர் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து மாணாக்கர்முதலானவர்களுக்கு மிகு சாதுரியமாகப் பிரசங்கம்செய்தார். அன்றைக்குச் சபைகூடின இடத்தில் வெப்பம் மிகுதியாயிருந்தது. அதனாலேதான் அவர் வருத்தப்பட்டுச் செவ்வாய்க்கிழமை தமது அறையினின்று வெளிப்படாமலிருந்தார். எப்படியும், நாலைந்து நாளுக்குள்ளே அவருக்கு உண்டான வருத்தம் ஔஷதத்தினாலே போக்கப்படுமென்று எல்லாரும் நினைத்தார்கள். இடிமுழக்கம் போன்ற இந்தத் தேவச்செயலினால் அவர் பத்தினியாகிய லேடி ஹாபர்ட் துக்கசாகரத்தில் அமிழ்ந்தார். குடிகளுக்கு வீண்தீர்வைகள் விதித்தும் நெருக்கமான ஏதேதோ சட்டங்கள் செய்தும் வருத்துவதாகாது என்றுசொல்லி, குடிகளுடைய நிலைமையை நிதானித்துப்பார்த்துத் துரைத்தனத்தை நீதிவழியில் நடத்திய இந்தச் சிறந்த தயாகுணபூர்ணரான கவர்னரவர்கள் இப்படி அசிந்திதமாய்க் காலஞ்சென்றது இந்நாட்டினது துரதிஷ்டமல்லவோ!



THE THRONE OF THE SHAHS OF PERSIA.

பாரஸீகதேசத்து அரசருடைய ஸிம்மாசனம்.